8

# சங்கநாதம்
# SANGANATHAM





சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம் – கொழும்பு

Youth League For Sanathana Dharmic Perception

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கநாதம்

## முழக்கம் 08

மாசி மாதம் 2001 விலை 15/-

15. 02. 2001 - 15. 03. 2001


மாசிமாதச் சிறப்புக்களையும் மனத்தூசிகளைத் துடைத்தெறிகின்ற தூய சிந்தனைகளையும் நீங்கள் வாசிக்கத் தொடங்குகையில் வணக்கம் கூறி வரவேற்கின்றோம்.

சிவராத்திரியை நாம் கொண்டாடும் வேளையில், சிவராத்திரிக்குப் பெயர் பெற்ற சிவத்தலமான திருக்கேதீச்சரம் இன்று பூசைகள் இன்றிப் பொசுங்கிக் கிடக்கின்றது.

அறப்பணிகளை அளவின்றி ஆற்றிடுவோம்! சங்கநாதத்தில் ஆழ்ந்து முத்துக்களைத் தேடுங்கள். முத்துக்கள் உள்ள சிப்பியைப்பற்றிய கருத்துக்களை எங்களுடன் பகிர்ந்திடுங்கள். உங்கள் அன்பான ஆதரவைச்சந்தா அங்கத்தவராகி மெருகூட்டுங்கள்.

ஆசிரியர்குழு


சங்கநாதம்
சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம்
இல. 03 றிஜ்வே பிளேஸ், கொழும்பு 04.


தவிர்க்க முடியாத காரணங்களாலும், அச்சகச் செலவுகள் அதிகரித்தமையாலும் இம்மாத இதழிலிருந்து விலை ரூபா 15/= ஆக உயர்த்தப்பட்டுள்ளது என்பதை வாசக நேயர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கநாதத்தின் ஸ்வரங்கள்

1. ஸ்ரீ இராமகிருஷ்ண விவேகானந்தப் பேரவை
19/1 D, உதயராஜ மாவத்தை, பதுளை.

2. மாத்தளை சனாதன தர்மயுவ விழிப்புணர்ச்சிக்கழகம்
**No 38, Vihara Road, Matala. T.P : 066 - 33014**

3. திவ்விய ஜீவன சங்கம் சிவானந்த தபோவனம்
உப்புவெளி, திருக்கோணமலை **T.P : 026 - 21469**

4. நுவரெலியா இந்துகலாச்சாரப் பேரவை
**No 30, Kandy Road, Nuwaraeliya**
**T.P : 052 - 23099**

5. அம்பாறை மாவட்ட அறநெறிப் பாடசாலைகள் இணையம்
நற்பிட்டிமுனை, கல்முனை **T.P : 067 - 21896**

6. மயூராபதி இந்து சமய அறநெறிப் பாடசாலை.

7. ஸ்ரீ கிருஷ்ணர் ஆலய நற்பணி மன்றம்.




## உள்ளே


மாத்தளை முத்துமாரி
அம்மன் ஆலயம் .........
சிவனை நினைந்திட .......
சமுதாய ஆணிவேர் .........
இல்லறத்தேரின்
அச்சாணி.....
திருக்கோணமலை பத்திர
காளி அம்பாள் ஆலயம்
புராண இதிகாசங்கள்.........
ஆரோக்கிய வாழ்விற்கு .....




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேகம் காணும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் திருக்கோணமலை



திருக்கோணமலைப் பட்டிணத்தின் இருதய ஸ்தானம் போல் விளங்குவது ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம். ஆலயத்திற்கு எதிராகப் பரந்த விளையாட்டு மைதானமும், அதனையடுத்துப் பரந்து விரிந்து கிடக்கும் இந்து சமுத்திரமும் இவ்வாலயத்திற்கு இயற்கை அழகையூட்டுகின்றன. ஈழத்திரு நாட்டின் தலைசிறந்த புண்ணிய பாடல் பெற்ற திருக்கோணேஸ்வரத்தை இவ்வாலயத்தில் நின்றுகொண்டே தரிசிக்கலாம். அம்பாளின் அருட்கடாட்சம் ஆலயத்தில் நிறைந்து இருப்பது போன்ற உணர்வு இவ்வாலயத்தில் நிற்கும்போது ஏற்படுகின்றது. ஆலயத்தின் உள்ளும் புறமும் எப்போதும் புனிதமாகவே இருக்கும்.

11ம் நூற்றாண்டில் இவ்வாலயம் சிறப்புற்று இருந்திருக்க வேண்டும் என்று சரித்திரப் பேராசிரியர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். பன்னெடுங்காலத்திற்கு முன்பு நிலத்தை அகழ்ந்த போது ஒரு தகளி கிடைத்ததாகவும் அதற்குள்ளே அம்மாளின் திருவுருவம் (தாமிரவிக்கிரகம்) இருந்ததாகவும் கூறுகின்றார்கள். விஷேச உற்சவங்களுக்கு இந்த அம்பாளை எழுந்தருளச் செய்வார்கள். இவ்வாலயத்தில் சிங்காவாகனமும் காணப்படுகின்றது. சுமார் 400 ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்ததாகக் கூறப்படும் கர்ணபரம்பரைக் கதை ஒன்று பத்ரகாளி அம்பாளிடத்துப் பயபக்தியை ஸ்திரப்படுத்திக் கொள்கிறது. ஒரு நாள் ஒரு பெண் தலைவிரி கோலமாக அம்பாளுடைய சன்னிதானத்திற்கு முன்பாக உதாசினமாகச் சென்றாளாம். அதனால் அப்பெண்ணினுடைய தலை ஒருபக்கம் திரும்பிவிட்டது. அம்பாளுக்கு அபசாரம் செய்துவிட்டதாக அப்பெண் சொற்பனங்கண்டு குற்றத்தை உணர்ந்து ஆலயத்திற்கு வந்து தனது தலைமயிர்களைக் கத்தரித்து நேர்த்திக்கடனாகக் கொடுத்த பின்புதான் தலை சரியான நிலைக்குத் திரும்பக்கூடியதாக இருந்ததாம்.

அதனைப் பாதுகாத்து வைத்திருந்து மகிஷாசுர சங்காரம நடைபெறும் போது அம்பாளுடைய சடைமுடியோடு சேர்த்துக்கட்டி அலங்கரிக்கும் வழக்கம் இருந்ததாம். அம்மயிர்களின் ஒரு பகுதி இன்றும் இருப்பதாகக் கூறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் முன்னால் பூசகர் பிரம்ம ஸ்ரீ க.கு சோமஸ்கந்தக்குருக்களின் அயராத பணியில் சகடையில் கம்புத்தடிகளால் தேர் செய்யப்பட்டு இரதோற்சவம் நடைபெற்று வந்தது. காலம் செல்லச்செல்ல கர்ப்பக்கிரக . விமானத்தைப் பூரணமாகத்திருத்தி அமைத்து அதில் கதைச்சிற்பங்களாகச் சபதகன்னியர்கள் அமைக்கப்பட்டனர். எல்லாத் தெய்வங்களும் மாற்றி அமைக்கப்பட்டு மண்டப வாசலுக்கு அருகே மணிக்கூட்டுக் கோபுரத்தை 40 அடி உயரத்திற்கு உயர்த்திக்கட்டி 600 இறாத்தல் எடையுள்ள காண்டாமணி ஏற்றப்பட்டுச் சம்புறோட்சன கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1972ம் ஆண்டு கட்டுத்தேருக்குப் பதிலாகச் சித்திரத்தேர் மூன்றும் மஞ்சமும் செய்யப்பட்டு இரத உற்சவம் நடைபெற்று வருகின்றது. கிழக்கிலங்கையில் முதன்முதலாக உருவாக்கப்பட்ட சித்திரத்தேர் இதுவாகும்.

பங்குனி உத்திரத்தைத் தீர்த்தோற்சவ தினமாகக் கொண்டு 10 நாட்கள் மகோற்சவம் நடைபெற்று வருகின்றது. 9ம் நாள் இரதோற்சவம். பங்குனி உத்தரத்தன்று அம்பாள் சமேத கோணேஸ்வரப்பெருமான் எழுந்தருளியிருக்கும் கோணமலையின் அடிவாரத்தில் உள்ள கடற்கரையில் அதிகாலையில் தீர்த்தம் ஆடுவர் அன்று மக்கள் வெள்ளம் கடல்வெள்ளத்தை மறைத்து நிற்கும் அற்புதக் காட்சியைக் காணலாம். வைகாசிப் பௌர்ணமிக்கு முதல் வரும் திங்களில் இவ்வாலயத்தில் பொங்கல் விழா நடைபெற்று வருகிறது. விஜயதசமியன்று கும்பவிழா வெகு சிறப்பாக நடைபெறும். ஒவ்வொரு ஆலயங்களிலிருந்தும் கரகங்கள் அழகாக அலங்கரிக்கப்பட்டுப் பத்திரகாளி அம்பாள் ஆலயத்துக்கு வந்து தரிசிப்பார்கள் அன்று ஆலய மைதானத்தில் மானம்புத்திருவிழா நடைபெறும்.

கோணேஸ்வரர் கோயிலிலிருந்து மாதுமையும். சிவன் கோயிலிலிருந்து விசாலாட்சியும் உலா வருவர். வருடாவருடம் 10 நாட்கள் இலட்சார்ச்சனையும் இறுதியில் சங்காபிஷேகமும்; பீஜ மந்திர உச்சரிப்புடனும் ஐப்பசி அமாவாசையில் நிறைவுறும். 1996இல் இராஜகோபுரத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு, இராஜகோபுரமும், கருவறையின் திரிதளவிமானமும் அமைக்கப்படுகின்றன. வேதாகம மாமணி சோ. ரவிச்சந்திரக்குருக்கள் திருப்பணிகளை மேற்கொள்கிறார். 2001ம் ஆண்டு தைப்பூசத்தன்று மகா கும்பாபிஷேகம் நடைபெறும்.

**தொகுப்பு;- குறளமுதம் க. விநாயகசோதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமநாதக்குருக்களின் வாபஸ்கோரிக்கை மனு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது

சங்கநாதம் முழக்கம் 5 (கார்த்திகை மாதஇதழ்) இல் "இலங்கையில் இன்று இந்து ஆலயப்பூசகர்கள் இந்துசமுதாயத்தை வழிநடாத்துகிறார்களா? இல்லையா?" என்ற விவாதத்தில் ஏற்படுத்தப்பட்ட சர்ச்சை ஆலயதர்மகர்த்தாக்கள், குருமார்கள் அடியார்கள், ஆகியோரின் வேண்டுகோளுக்கு இணங்க இவ்விதமுடன் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

விஸ்வநாதக்குருக்கள் "தான் கூறிய கருத்தில் எவ்வித மாற்றமில்லை" என்றும் ஒருபோதும் வாபஸ் பெறமாட்டாது எனவும் திட்டமாகவும், தெளிவாகவும் தெரிவித்துள்ளார்.

# இலவசக்கருத்தரங்கு





கொழும்பு தெற்குப்பாடசாலைத் தமிழ்மாணவர்களின் தமிழ் இலக்கிய சைவ அறிவை வளர்க்குமுகமாக 30.01.2001 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் 12.30 வரை கொழும்புத் தமிழ்ச்சங்க மண்டபத்தில் இந்தியாவில் இருந்து வருகை தந்த இலக்கியப் பேராசிரியர் டாக்டர். இரா. செல்வகணபதி அவர்களால் இலக்கியச் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. இக்கருத்தரங்கில் 300 ற்கு மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றிப் பயனடைந்தனர். சங்கநாத சஞ்சிகை, சூரியன் எப். எம் அனுசரணையுடன் நடைபெற்ற இக்கருத்தரங்கில் பங்குபற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் ஆகியோருக்கும் இக்கருத்தரங்கை ஒழுங்கு செய்து தந்த ஹேமாசர்மா அவர்களுக்கும் சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதங்களும் மதப்போதகர்களும்



"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தம்மை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே"

இது தான் எங்கள் பாதை ஒரு சாரதி எல்லாச் சாலைகளும சேருமிடத்திற்குப் போகும் என்றாலும் அச் சாரதியை நம்பமாட்டோம். இவ்வகையில் எல்லா மதங்களும் சமம் என்று சொல்பவர்களை நாம் நம்ப வேண்டாம். ஏனைய மதங்களைச் சேந்தவர்களுடன் சமரசத்துடன் ஜீவிக்க வேண்டும். ஆயினும் இந்து மதத்தின் மகிமையை நாங்கள் மறக்க வேண்டாம். இந்து மதத்தைப்பற்றிச் சுவாமி விவேகானந்தர் என்ன சொன்னார்? "இந்து மதம் மறைந்து போனால் உலக பக்திக்கலாச்சாரம் மறைந்து விடும்" என்று கூறினார்.

கிறிஸ்தவ மதப் பிரச்சாரங்களின் சில போதனை அம்சங்களை நாம் ஆராய வேண்டும். இந்து மதத்தில் இயேசு போன்ற ஒரே ஒரு தலைவர் இல்லை. ஒரே ஒரு காப்பாளர் என்ற கொள்கை இல்லை. இந்து மதக்கொள்கையைப் பொறுத்தவரை அவதாரங்கள், அவதார புருஷர்கள், சற்குருக்கள் திவ்விய பாதை காட்டுகின்றார்கள். ஆனாலும் அவர்கள் மோட்ஷம் கொடுக்க முடியாது. ஒரு ஜீவன் தார்மீகப் பாதையில் சென்றால் அவர்களுடைய நற்கர்ம வினைப்பயன் அடிப்படையில் மோட்ஷம் பெறுவான். இது இந்து பௌத்த மதங்களின் கோட்பாடாகும். இந்துப் பக்திமார்க்கத்தைப் பொறுத்தவரை ஒரு சாதகன் தன்னைத் தூய்மைப் படுத்துகின்றான். பிறகு கடவுளின் கிருபை பெறுவான். எந்த அதிகாரத்திலும் கிறிஸ்தவன் சொல்லுவான் "இயேசு கூறினார்" ஒரு முஸ்லீம் சொல்லுவான் "முகம்மது கூறினார்" ஒரு பௌத்தன் சொல்லுவான் "புத்த பெருமான் கூறினார்". ஆனால் இந்து மதம் அப்படி இல்லை. இந்து மதத்தில் ஒரே ஒரு அவதாரம், ஒரே ஒரு புனித நூல் இல்லை. நிறையக் குருமார்களும், புனித நூல்களும் இருக்கின்றன. இந்து மதத்தின் நிறைய முனிவர்களின், சற்குருக்களின் பாதைகளில் சிறு சிறு வித்தியாசங்கள் காணப்படுகின்றன. இவைகளெல்லாம் சனாதன தர்ம குடைக்குக்கீழ் இயங்குகின்றன. எத்தனை இந்து வீட்டில் பிரார்த்தனை அறைகளில் திருஞானசம்பந்தர், திருமூலர், சைதன்யர், துக்காராம் முதலிய முனிவர்களின் படங்களைக் காணலாம்? ஆகவே இந்து சமுகத்தில் பெரும் விழிப்புணர்ச்சி தேவைப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஸ்கிருத அறிவு உள்ளவர்களும், சந்தியாவந்தனம் செய்பவர்களும் மாத்திரமே மந்திரம் சொல்லத் தகுதியுடையவர்கள்.

காயத்திரி மந்திரம், ஸ்ரீ லலிதா ஸ்தோத்திரம் போன்ற மந்திரங்கள் இந்துக்களால் பாராயணம் செய்யப் படலாமா? என்பது இன்று எழுந்துள்ள ஒரு கேள்வி ஆகும். இதுபற்றி வசந்தா வைத்தியநாதனுடன் ஓர் நேர்காணல். மந்திரம் பெரும் பாலும் வட மொழியிலேயே அமைந்திருக்கிறது. வடமொழி உச்சரிப்பு மிகவும் உன்னதமானது. பயிற்சியாற்றான் உச்சரிப்பு வரும். அதைக் காதாற் கேட்டு நாம் மனனம் செய்ய வேண்டும். காயத்திரி மந்திரத்தைத் தமிழிற்தான் எழுதுகிறார்கள், வட மொழியில் யாரும் எழுதுவதில்லை. தமிழ்ச் சொல்லை நாம் ஒழுங்காக உச்சரிப்பதில்லை. தமிழை வாசிப்பதே கடினம் அதை விடுத்து வடமொழியை எவ்வாறு சரியாக உச்சரிப்பார்கள்? பிழையாக உச்சரிக்கும் போது ஒலி வேறுபடுகிறது. ஒலி மாறுபடப் பொருள் மாறுபடும் பொருள் மாறுபடப் பயன் மாறுபடும். நாம் சாதாரணமாகச் சொல்லும் போது அதன் பயன் தெரிவதில்லை இதை விரதமாக எடுத்துச் செய்யும் போது அதன் பலன் தெரியும்.



நாதவிவாதம்

உதாரணமாக நாம் மருந்து உட்கொண்டால் அதன் பலன் உடன் தெரியும். ஆனால் இம்மந்திர பலன் அளிக்க ஆண்டுகள் பலவாகும். காலப் போக்கில் தீயபலன்களைக் கொண்டு வரும்.

மந்திரம் சொல்வது இப்பொழுது நாகரீகமாக மாறிவிட்டது. அசைவ உணவைச் சாப்பிட்டும் மந்திரம் செய்வர். ஏன் இவ்வாறு சாப்பிட்டுச் சொன்னால் என்ன? என்றும் கேட்பர். உணவு உணர்வுகளுக்கு அடிப்படை சாத்வீகமான உணவு சாப்பிடுகின்றவர்களுடைய கொள்கை,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணம் வேறுபாடாக இருக்கும். மருத்துவர் ஒரு அறுவைச் சிகிச்சைக்கு வரும் போது எவ்வளவு தூய்மையாக வருகின்றார்கள். அதே போல் மந்திரத்தை அணுகுவதற்கு முன் புறத்தூய்மை, அகத்தூய்மை என்பன வேண்டும். மந்திரம் சொல்ல நாம் தகுதியுடையவர்களா? என்று நம்மை நாமே கேட்க வேண்டும். மந்திரம் என்பது ஒரு சந்தஸ் அதாவது சரியாக சொல்லாவிட்டால் அது வேறொன்றாக மாறுவதற்கு வழி உண்டு. இது ஒரு பா வகை அந்த அமைப்பில் தான் பாடலாம் அதை விடுத்து வேறு உச்சரிப்பில் பாடினால் அதன் பொருள் மாறுபடும்.

முற்காலத்தில் இம் மந்திரங்களை இறுக்கமாகவே வைத்திருந்தார்கள். யாரும் சொல்லக்கூடாது, சில குறிப்பிட்ட பிரிவினர்தான் சொல்லலாம். அனுஷ்டானம் செய்த அந்தணர்களில் கூட சந்தியாவந்தனம் செய்து முறைப்படி இல்லாதவர் காயத்திரி மந்திரம் சொல்லக் கூடாது. பிறப்பினால் அந்தணராக இருந்தாலும், காயத்திரி மந்திரம் சொல்வதற்கு அருகதையற்றவர்கள். ஆனால் இப்பொழுது இந்த இறுக்கம் தளர்ந்து விட்டது. யாரும் சொல்லலாம் என்ற நிலைக்கு வந்துவிட்டது. இதனால்தான் இம்மந்திரங்கள் இன்று பலவீனப்பட்டுவிட்டன. எல்லோரும் மந்திரம் சொல்வதால் பலன் அதிகமாகக் கிடைக்க வேண்டும். ஆனால் இன்று பலன்கள் எதுவும் இல்லை நிம்மதியற்ற வாழ்க்கை அல்லவா வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். சமஸ்கிருத பாண்டித்தியம் பெறாத யாரும் காயத்திரி மந்திரம் சொல்லக் கூடாது. என்பதுதான் எனது வாதம்.

## சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் பாராட்டுவிழா






சங்கநாதம் சஞ்சிகை, சூரியன் F.M இணைந்து அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற போட்டிகளில் முதலிடத்தைப் பெற்ற யாழ் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் அணியினரைக் கௌரவிக்கும் விழா சென்ற மாதம் 10.01.2001 திங்கட்கிழமை மாலை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிசன் மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் கலந்து சிறப்பித்தவர்களுக்குச் சங்கநாதம் தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனை நினைந்திட ஓர் இராத்திரி
# சிவராத்திரி



இந்து ஆலயங்களில் சிவராத்திரி தினத்தில் திரைப்படங்கள் பார்த்தல், கச்சேரிகள் வைத்தல், சீட்டாடல் போன்றன நடைபெறுதல் இந்து சமூகத்தைத் தவறான பாதையில் வழிநடத்திச் செல்ல ஒரு வாய்ப்பாகும். இவ்வாறான முறைகளை விட்டு சிவராத்திரி எவ்வகையில் கொண்டாடப்பட வேண்டும்? என்பதைச் சற்றுச் சிந்திப்போம்.

சிறப்பான புண்ணிய தினங்களில் சிவராத்திரி ஒன்று. இது மாசி மாதத்தில் கொண்டாடப்படும் வழிபாட்டுத் தினமாகும். சிவராத்திரி என்றால் துன்பம் நீங்கி, இன்பம் பெறலாம் என்பது பொருள். சிவராத்திரியைப் பற்றிய புராண வரலாறுகள் பல உண்டு.

ஒரு யுகத்தில் ஏற்பட்ட பிரளயத்தால் எல்லா உயிர்களும் மறைந்து விட்டன. எல்லாம் கடவுளிடம் ஒடுங்கி விட்டன. இறைவன் ஒருவனே இருந்தான். அக்கடவுளின் அம்சமான சக்தியே உமாதேவி, அவள் உயிர்களுக்கு இரங்கிச் சிவபெருமானை நோக்கித் தவம் கிடந்து "எம்பெருமானே! அடியேன் இந்த இரவு முழுவதும் சிவபூஜை செய்தேன் ஆதலினால் இது சிவராத்திரி எனச்சிறப்புப் பெயர் பெற வேண்டும். இந்நாளில் உயிர்களெல்லாம் இப்பிறவியிலும் மறுபிறவியிலும் இன்பம் அடைதல் வேண்டும்." என்று கேட்க இறைவனும் அப்படியே ஆகுக! என்று அருள்புரிந்தார். இது சிவராத்திரி பற்றிய வரலாறு.

உமாதேவி விளையாட்டாகத் தன் கைகளால் சிவபெருமானின் கண்களைப் பொத்தினாளாம். உடனே உலகமெல்லாம் இருள் மூடிவிட்டது. அந்த இரவுதான் மகா சிவராத்திரி என்று மற்றுமொரு கதையுண்டு. தைப்பனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரையைத் துளைக்கும் என்றும், மாசிப்பனி மச்சத்தைத்துளைக்கும் என்றும், பனிக்குப் பயப்படுவோர் கூறுவதுண்டு. ஒரு காலத்தில் ஒரு வேடனைப் புலி விரட்டிச்செல்ல அவன் ஒரு வில்வமரத்தில் ஏறிக்கொண்டான். புலி மரத்தினடியிலேயே பதுங்கிக் கிடந்தது. "புலி அடிப்பதற்கு முன் கிலி அடித்து விடுமோ?" என்று அஞ்சிய வேடனுக்கு இரவு உறக்கமே இல்லை. விடியும் வரையும் வில்வ இலையைக் கீழே போட்டுக் கொண்டிருந்தான். அந்த இரவு சிவராத்திரி என்பது அவனுக்குத் தெரியாது. காலையில் புலியிருந்த இடத்தில் ஒரு சிவலிங்கத்தைக் கண்டான். அந்தச்சிவராத்திரியிலே வேடன் பெறுவதற்கரிய பேறு பெற்றான் என்று கதையொன்று வழங்குகின்றது.

சிவராத்திரி விரதம் இருப்போர் சிவபூஜை செய்யலாம். இரவுமுதற் சாமத்தில் சிவலிங்கமூர்த்தியைப் பஞ்ச கவ்வியத்தினால் அபிஷேகம் செய்து சந்தனக் குழம்புடன் வில்வம் சாத்தி தாமரை மலர்களால் அர்ச்சிக்க வேண்டும். இரண்டாம் சாமத்தில் பஞ்சாங்க அபிஷேகம் செய்வித்து சந்தனத்துடன் தாமரை மலர்கள் சாத்தி, வில்வத்தால் அர்ச்சனை செய்தல் வேண்டும். மூன்றாம் சாமத்தில் கருப்பஞ்சாற்றால் அபிஷேகம் செய்து அரைத்த குங்குமப் பூவுடன் நந்தியாவர்த்தமலா சாத்தி, நீலோற்பவப் பூவினால் அர்ச்சிக்க வேண்டும். எல்லாச் சாமங்களிலும் தூப தீபாராதனைகள் முறையாகச் செய்ய வேண்டும். ஊண் உறக்கம் ஒழிக்க வேண்டும். விடிந்ததும் ஸ்நானம் செய்து தூய்மையாக்கிக் கொண்டு ஆலய வழிபாடு செய்தபின் ஆறு நாழிகைக்குள், பாரணை பண்ண வேண்டும். அன்று பகல் முழுவதும் தூங்காமல் சிவகதைகள் கேட்டுக் காலத்தை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு செய்ய முடியாதவர்கள் சிவராத்திரி அன்று உணவு ஒழித்து, சிவகதைகள் கேட்டு, சிவாலய வழிபாடு செய்து மறுநாள் காலையில் பாரணை செய்யலாம். சிவராத்திரி இரவு பதினான்கு நாழிகைக்கு மேல் மூன்றே முக்கால் நாழிகை, சிவதரிசனத்துக்கு மிகவும் உயர்ந்த காலமாகும் என்றும் அப்படிச் செய்தால் இறையருள் கிட்டும் என்றும் கூறப்படுகிறது.

***தொகுப்பு T. பவாணி***


மாத்தளை சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக்கழகத்தின்
கவிதைப்போட்டி இல: 04

தலைப்பு: **மா(த்)தளை** (12 வரிகள் மட்டும்)

முடிவுத்திகதி 05.03.01
(ச.த.யு.வி.க)
No 38, vihara Road, Matala.

போட்டி இல. 1 இல் வென்றவர்
செல்வி சு. **தவராணி**
மா/ கம்மடுவ கனிஷ்ட தமிழ் வித்தியாலயம், கம்மடுவ




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால அடிப்படையில் இந்துமதம்

பிரளயம் எனப்படுவது பிரம்மதேவனின் இரவு நேரத்திலும், உலகப்படைப்பு என்பது அதே தேவனின் பகற் காலத்திலும் ஏற்படுகின்றது. பிரம்ம தேவனின் இரவு நேரத்தின் நிமித்தமாக இப்பிரளயம் ஏற்படுகின்ற காரணத்தால் இதனை நைமித்திகப் பிரளயம் என்பார்கள். ஈரேழு பதினான்கு லோகங்களுள் பூலோகம், பூர்வலோகம், சுவர்க்கலோகம் என்று சொல்லப்படுகின்ற மூன்று லோகங்கள் மட்டுமே அழிக்கப்பட்டுப் படைக்கப் படுகின்றன. பிரம்ம தேவனின் ஒரு பகற் காலத்தை ஒரு "கல்பம்" எனவும், இந்தக் கல்பங்கள் மொத்தம் ஏழு எனவும் கூறுவது உண்டு.

யுகங்கள் நான்கும் சுழற்சியில் எழுபத்தொரு தடவைகள் வருவது ஒரு மனுவின் காலமாகும். ஆகவே உலகைப் படைக்கும் பிரம்மதேவனின் ஒரு பகற்காலத்தில் யுகங்கள் நான்கும் ஒவ்வொன்றும் ஆயிரம் தடவை வந்து செல்கின்ற போது பதினான்கு மனுக்கள் வருகின்றனர். இவ்விதமாகக் கணக்கிடும் போது பிரம்மதேவன் நூறு ஆண்டுகள் இருப்பார் என்றும், அவரது ஆயுள் முடிந்தவுடன் மற்றொரு பிரம்மதேவன் உலகைப் படைக்கத் தோற்ற மளிக்கின்றார் என்றும் கூறுவர். தற்பொழுது பதவியிலிருக்கும் பிரமதேவனின் காலத்தில் பாதி கழிந்துவிட்டது எனவும், அவர் ஆயுளின் இரண்டாவது பாதி நடந்து வருகின்றது எனவும் கணிக்கப் பட்டிருக்கின்றது. பிரம்ம தேவன் என்கின்ற பட்டத்தினை அடுத்ததாக அலங்கரிக்கப்போகின்றவர் சிரஞ்சீவிகள் எழுவரில் ஒருவரான **அனுமன்** என்பது காலத்தின் நிர்ணயமாகும்.

ஒவ்வொரு யுகத்திற்கும் ஒவ்வொரு யுகதர்மம் இருக்கின்றது. கிருதயுகத்தில் மானுட வர்க்கத்திற்கான சராசரி வயதான ஐம்பதாயிரத்தில் இருந்து லட்சம் வரை சொல்லப்படுகின்றது. "எது வரை உடலில் எலும்பு இருக்கின்றதோ, அதுவரையில் உடலில் உயிர் இருக்கும்" என்பதுதான் கிருதயுகத்தின் தர்மம். இரண்டாவது யுகமான திரேதாயுகத்தின் தர்மமும், ஞானமும், ஆயுளும், ஆகாரமும் கிருதயுகத்தில் இருந்ததைவிடக் குறைந்து விடுகின்றது. "எதுவரையில் உடலில் மாமிசம் இருக்கின்றதோ, அதுவரையில் உயிர் இருக்கும்" என்பது திரேதாயுகத்தின் தர்மம். நல்லோர்களுக்கெல்லாம் அசுரர்களாலும் ராட்சஸர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களால் எண்ணற்ற இடையூறுகள் ஏற்பட்டலும் திரேதாயுகத்திலதான் என்பது தெளிவு. மூன்றாவதான துவாபரயுகத்தில் தர்மமும், அதர்மமும் சரிசமநிலையில் கொது விடுக்கின்றது. "எதுவரையில் உடலில் இரத்தம் இருக்கின்றதோ, அதுவரையில் உயிர் இருக்கும்". என்பது துவாபரயுகத்தின் தர்மம். ஒரே குடும்பத்தையும் ஒரே குலத்தையும் சார்ந்துள்ளவர்களுக்குள் பூசல் ஏற்பட்டு அவர்கள் அனைவரும் யுத்தபூமியில் சந்திக்கும் நிலையை ஏற்படுத்தியது துவாபரயுகம். நான்காவதான கலியுகத்தில் தர்மமும ஞானமும் கர்மமும் பக்தியும் பேச்சளவில் இருந்து கொண்டு கால்பாகத்தில் இருக்கின்றது. "எதுவரையில் ஆகாரம் உட்கொள்ளப் படுகின்றதோ அதுவரையில் உடலில் உயிர் இருக்கும்." என்பது கலியுக தர்மம். மகான்களும், அருளாளர்களும் அவ்வப்போது தோற்றமாகி, மானிடவர்க்கத்தை நல்வழிப் படுத்தப் பாடுபட்டதும், நல்ல உபதேசங்களை நல்கியதும் கலியுகத்தில் நடந்துவரும் நன்நிமிர்த்தங்களாகும். யுகங்களுக்கு யுகங்கள் தர்மமானது வேறுபடுவதற்கான காரணம், உலகத்தின் பொருட்டுத்தான் என்பது பெரியோர்களது வாக்கு. ஞானத்தையே அனைவரும் விரும்பியது கிருதயுகம்; தவம், யாகம் ஆகியவைகளால் செய்வதையே விரும்பியது திரேதாயுகம்; பூஜை, தியானம் போன்றவைகளை அனைவரும் விரும்பியது துவாபரயுகம்; பகவானுக்கென்று தனியிடம் ஒன்றை நிர்மாணித்து அங்கு சென்று தரிசனம் செய்ய அனைவரும் விரும்பியது கலியுகம்.

யுகதர்மங்கள் எவ்வாறாக அமைந்திருந்தாலும் மானுட வர்க்கத்திற்கான கடமையைச்சரிவரச் செய்து கொண்டிருந்தால், விரைவாக நல்லநிலையையும், நற்கதியையும் பெறலாம் எனபதை உணர்ந்தவர் வாழ்வில் உயரலாம்.

**தொகுப்பு S. பிரதீபா**
**சுடர் ஒளி**
**(சனாதன தர்மக் கழகம்)**

**தைப்பொங்கல் யாருக்குரியது? சுவாமி தந்திரதேவா மகராஜ்**

சில வருடங்களுக்கு முன்பு கத்தோலிக்கப் பாதிரியார் ஒருவர் வீசாநகர் திருக்கோணமலையில் தைப்பொங்கல் தினத்தை தேவாலயத்தில் கொண்டாடினார்கள். இதனை இந்து மட்டுமல்ல தமிழ்மக்கள் எல்லோரும் கொண்டாட வேண்டும் என்று கூறினார். ஆனால் தேவாலயத் தலைமைப்பீடம் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் இவர் இந்துமதத்தைச் சார்ந்துவாதிடுகின்றார் என்று அவருக்குத் தண்டனையாக வேறு இடத்திற்கு இடம்மாற்றி விட்டார்கள் இதுவரை அவரைக் காணவில்லை. ஆனால் இப்போது கத்தோலிக்கர்கள் சொல்லுகிறார்கள் பொங்கல் என்பது இந்துக்களுக்கு மட்டுமல்ல எல்லாத் தமிழரும் கொண்டாட வேண்டும் என்று. இந்த வருடத் தைப்பொங்கல் தினத்தன்று அதே தேவாலயத்தில் அதிகாலை ஒலிபெருக்கி மூலம் பாதிரியார்கள் தைப்பொங்கலுக்கு ஆசீர்வாதம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருடன் அடைந்த முத்தி

கருத்துள்ள கதை

உங்களை நம்பி வழிபடுபவர்களை நீங்கள் காப்பாற்றுகிறீர்கள். கயிலைமலைக்கு வந்து யாத்திரையை முடிப்பவர்களுக்குப் புண்ணியகதி கிடைக்கிறது. காசிக்கு வந்து கங்கையில் நீராடி, விசுவேசுவரரைத் தரிசனம் செய்பவர்களுக்கு நற்கதி கிடைக்கின்றது. ஆனால் இப்படி ஏதும் செய்ய முடியாதவர்கள் பலர் இருக்கிறார்கள் வாழ்க்கையை நல்லவிதமாக அமைத்துக் கொள்ள முடியாதவர்களும் பலர் இருக்கிறார்கள் அவர்களுடையகதி என்ன? என்று கேட்டாள் பார்வதி.

உனக்குத் தெரிய வேண்டுமா? என்னுடன் வா! என்று காசியை நோக்கிப் புறப்பட்டார் சிவபெருமான். பார்வதிதேவி கிழவியாகவும் சிவபெருமான் கிழவராகவும் கயிலை விசுவநாதர் ஆலயத்துக்கு முன் போய் நின்று கொண்டார்கள். கிழவருக்கு மூச்சுவாங்கத் தொடங்கிற்று. மனைவியின் மடியில் தலையை வைத்துக் கொண்டார். கிழவி போவோர் வருவோர் அனைவரையும் பார்த்து "ஐயா! என்கணவருக்கு உயிர் பிரியும் தருணம் வந்து விட்டது யாராவது கொஞ்சம் கங்கைநீரை வாயில் விடுங்களேன் என்னால் அவரை விட்டுவிட்டு போய்க் கங்கைநீரைக் கொண்டுவர முடியவில்லையே? "என்று அழுதாள். ஆனால் யாருமே முன்வரவில்லை. கங்கையில் நீராடுவதும், விசுவேசுவரைத் தரிசிப்பதும், தங்களுக்கென்று புண்ணியம் தேடிக் கொள்வதுமே முக்கியமாகத் தோன்றிற்று.

இருட்டு நேரமாகிவிட்டது. ஒரு திருடன் வந்தான் கிழவியைக்கண்டதும் அவனுடைய மனம் இரக்கத்தால், கீழே மண்டியிட்டு கிழவரின் வாயில் கங்கைநீரை ஊற்றப்போனான். ஐயா! கொஞ்சம் நில்லும், நீர் கொஞ்சம் கங்கைநீரை ஊற்றியதும் கிழவரின் உயிர் பிரிந்துவிடும். அதற்குள் நல்ல காரியம் ஏதாவது நினைவுக்கு வந்தால் அதை நினைத்துக் கொண்டு வாயில் கங்கைநீரை விடும்! என்றாள். திருடனால் எவ்வளவோ முயன்றும் தான் செய்த ஒரு நல்ல காரியத்தையாவது நினைவுக்குக் கொண்டுவர முடியவில்லை. அப்படி எதையாவது அவன் செய்திருந்தால் தானே? அம்மா! நான் இதுவரை நல்லகாரியம் எதையும் செய்யவில்லை. என்னுடைய வாழ்க்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல்தடவையாக இப்போதுதான் ஒரு நல்ல காரியம் செய்திருக்கிறேன். இதற்கு நல்ல பலன் கிடைத்தாலும் சரி கிடைக்காவிட்டாலும் சரி நான் வருத்தப்பட மாட்டேன்! என்று சொல்லிக் கொண்டு கிழவன் வாயில் கங்கை நீரை ஊற்றினான்.

கிழவன், கிழவி இருவரும் மறைந்து போனார்கள். ஈசன் உமையவள் சமேதராக அவனுக்குத் தரிசனம் கொடுத்தார்கள். அன்பனே! உனக்கு முத்தியை அருளுகின்றேன்! உனக்கு அளிக்காமல் வேறு யாருக்கு அளிக்க முடியும்? உன் மனதில் இரக்கம் இருக்கின்றது. கையில் கங்கைநீர் இருக்கின்றது. வாக்கில் சத்தியம் இருக்கின்றது. இதை விட முத்தியைப் பெறுவதற்கு வேறு என்ன தகுதி வேண்டும்? எனக் கூறிவிட்டு மறைந்து போனார். ஈசன் பார்வதிக்கு எல்லாம் விளங்கிவிட்டது. வாழ்க்கையில் இதுவரை நல்ல காரியங்கள் செய்யாமலே இருந்து விட்டாலும் பரவாயில்லை. இனியாகிலும் செய்ய முற்படுங்கள். அது உங்களுக்கு நல்ல கதியைக் கொடுக்கும்.

**தொகுப்பு லோ . பிரசன்னாவருன்**

## அம்பாறை மாவட்ட அறநெறிப்பாடசாலைகள் ஒன்றியம் ஆற்றிய சைவசமயச் செயற்திட்டங்கள்.

23.24.12.2000 அன்று சுவாமி தந்திரதேவா மகராஜின் அறநெறி எழுச்சி, பாண்டிருப்பு விஷ்ணு ஆலயநெறிப் பாடசாலை, கல்முனை மாமாங்க விநாயகர் பாடசாலை, பெரிய நீலாவணை விபுலானந்த பாடசாலை, அட்டப்பளம் விநாயகர் பாடசாலை ஆகியவற்றில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

கல்முனை 1,2 ஆகிய இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் கடந்த 07.01.01 இல் மூன்று அறநெறிப் பாடசாலைகளில் கற்கும் 75 மாணவர்களுக்குப் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன.

நற்பிட்டிமுனை இந்து இளைஞர் மன்ற அறநெறிப பாடசாலையின் ஆண்டு விழாவும், ஆசிரியர்களைக் கௌரவிக்கும் விழாவும் நற்பிட்டிமுனை சிவசக்தி வித்தியாலயத்தில் கடந்த 21.01.01 இல் நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னதம் தந்திடும் அன்னை வந்தாள்

அன்புருத்தாங்கி எம்மை ஆதரித்தணைத்து நிற்க,
துன்பிருள் நீக்கி எம்மைத் தூய்நெறிக்கிட்டுச் செல்ல,
இன்புறும் இமயதீரன் சிவானந்தர் அன்பினுக்குரிமையாக்க,
வென்றிடும் வீரவாழ்வு தந்திட அன்னை வந்தாள்.

அகிலத்தைத் தாங்கும் அன்னை அருள்வழி கூட்டி வைக்க,
அகதி வாழ்வகன்று மக்கள் அன்பினில் நிலைத்து நிற்க,
அகஇருள் நீங்கி அன்பர் அறிவினில் ஆழ்ந்து நிற்க,
அற்புதப்பணிகள் ஓங்கி ஆனந்தம் பெருக்கி நிற்க அன்னை வந்தாள்.

துன்பிருள் தொடராவண்ணம் தூயநற்பண்பு சேர்க்க,
இன்பமும் எழிலும் கூட்டும் மந்திரமகிமை காட்ட,
மன்பதை மேன்மை காட்டும் மாண்புறு தொழில்கள் கூட்ட,
சென்றதை மறந்து செம்மைச் சிவநெறி சேர்த்திட அன்னை வந்தாள்.

தம்மையே தந்தென்றும் எம்மைத்தாங்கிடும் தலைமையாகி,
முன்னரே கூறியவை முறைப்படி தொடரல் காட்ட,
பின்னரும் தவத்தில் நின்றெம் பிழையெலாம் பொறுத்து
புன்மைகள் போக்கி எம்மைப்புரந்திட அன்னை வந்தாள்.

அன்னையை இழந்தால் பின் அது பெறலரிதாமென்ற,
தொன்மைசேர் நிலையை மாற்றித் துயரறுத்தின்பமூட்டி,
இன்னலும் இடுக்கண் யாவும் அன்பினில் கரைதல் காட்டி,
உன்னத வாழ்வு தந்து உயர்த்திட அன்னை வந்தாள்.

பெற்றாலே பிள்ளையென்ற பிழையுறு போக்கை மாற்றி,
உற்றார் மற்றுறவினர் எவரும் அற்றார்க்கெல்லாம்,
சுற்றமும் துணையுமாகித் தொல்நிதி தானேயாகி,
பெற்றிடும் பேறு காட்டித் தந்திட அன்னை வந்தாள்.

**திருமதி. செல்வம் கல்யாணசுந்தரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமுதாயத்தின் ஆணிவேர் பிராமணர்கள்

மனிதர்களை நெறிப்படுத்தவென உருவாகிய மிகவும் பழமை வாய்ந்த இந்து மதம் மனிதன் எப்போதும் இன்பமாக வாழவேண்டும் என்ற நோக்கத்தினைப் பிரதான குறிக்கோளாகக் கொண்டது. ஆலயங்கள் தான் பிறப்பின் மேன்மையைச் சிறப்பிக்கும் இடம் என்பதைக்கண்ட எம் முன்னோர்கள் அதனை நடைமுறைப்படுத்தினர்.

வேதங்களை ஆராய்ந்து வேதாந்தங்களை அறிந்து அவற்றில் விளங்கிய அறிவைச் சரியான வழியில் பயன்படுத்தித்தானும் பிறரும் வாழும் வழியைக்கூறித் தானும் வெற்றி கண்டு பிறரும் வெற்றிகாண வழிவகை செய்யும் பிராமணர்களை ஆலயங்களிலும், இல்லங்களிலும் கிரியைகள் செய்வதற்கென மிகவும் பெருமைப் படுத்தியுள்ளனர் எம் முன்னோர்கள். விவேகம் சத்தியத்தின் ஆதாரத்திற்தான் செய்யப்படுவதாகக் கண்டதாற்றான் பிராமணர்கள் ஆற்றலும், அறிவும் மிக்கவர்களாகவும் ஒழுக்கமிக்கவர்களாகவும் வாழ்ந்து மக்களையும் உயரிய நிலைக்குக் கொண்டு வரத்தங்களையே வழிகாட்டியாக்கினார்கள்.

ஆலயங்களிலே அன்புதான் கடவுள் என்பதையும் அதைவளர்க்கும் நிலையைக் கிரியைகளாகவும் ஆக்கி மக்கள் மனதில் தைரியத்தையும் அதன் மூலம் உடல் தைரியத்தையும் வளர்க்க மக்களைப் பழக்கினார்கள். அதற்காகத் தங்களையே அர்ப்பணித்தார்கள். கல்வியிலும், இறை உணர்விலும், ஆலயக்கடமைகளிலும் அன்பு, அஹிம்சை, ஆசாரம் போன்ற உயர் பண்புகளிலும் சிறந்துவிளங்குகின்ற பிராமணர்கள் மக்களின் சமத்துவ வளர்ச்சியில் பெரிதும் அக்கறை உள்ளவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

கோபத்தையும், மோகத்தையும் விட்டவன் பிராமணன். பிறரைத்துன்பப்படுத்தாதவனாக, உண்மையானவனாக, புலன்களை வென்றவனாக, அறப்பற்றுடையவனாக வேதமோத விருப்பமுள்ளவனாக, பிரமச்சாரியம், அகங்காரமின்மை என்பவற்றை இயல்பாய்க் கொண்டவனாகப் பிராமணன் வாழ்ந்து வந்ததால் தான் எம்மதம் இன்றும் அழியாது காக்கப்பட்டு வருகின்றது. இதனாற்றான் பிராமணர்கள் எமது மதத்தில் உயர்ந்தவர்களாகக் கருதப்பட்டார்கள். மதத்தின் கண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று போற்றப்பட்டார்கள். இன்றும் போற்றப்பட்டு வருகின்றார்கள்.

பிறருக்கு வேதனை தராத சொற்கூறல், பொறாமை கொள்ளாதிருத்தல், எதையும் நன்குஅறிந்து செயற்படுதல், எல்லாவற்றுக்கும் மேலாகத்தான் இருக்கும் இடம் மேன்மையுறத்தன்னையே அர்ப்பணித்துச் செயல் படுதல் போன்ற தியாகங்கள் இன்று பிராமணர்களிடம் காணப்படுவதால் தான் அரசியல் குழப்பம் நிறைந்த, கணனியில் முன்னேற்றம் அடைந்துவிட்ட இன்றைய காலப்பகுதியிலும் பிராமணர்களை இந்து மதத்தின் கண்களெனப் போற்றி வணங்கி வருகின்றனர் எமது இந்து சமுதாயத்தினர்.

**நோவூட் பிரேமகாந்தக்குருக்கள்**

# மகா மிருத்தியுஞ்ச யாகம்

திருக்கோணமலை சிவானந்த தபோவன ஸ்தாபகர் ஸ்ரீ சுவாமி சிவானந்த சச்சிதானந்த சரஸ்வதி (வண. மாதாஜி) அவர்களின் 94வது பிறந்ததினத்தைக் கொண்டாடும் முகமாக மாசி மாதம் 8ம் திகதி சிவானந்த தபோவனத்தில் உலக நன்மைக்காகவும், எமது நாட்டு நன்மைக்காகவும் மஹா மிருத்தியுஞ்ச யாகம் இறையருளால் வெகு சிறப்பாக நடைபெற்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை


## பாராட்டு

சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழக யோகாசனப் பயிற்றுவிப்பாளர் திரு N. ஆறுமுகம் அவர்களுடன் அங்கத்தவர்களான S. யாஹரன், P. சுதர்சன் S. விஜியேந்திரன் ஆகியோர் சின்மயா மிஷனால் வறக்காப்பொலையில் நடாத்தப்பட்ட ஆன்மீக முகாமில் பங்குபற்றினர் இவர்கள் சிறந்த ஆன்மீகப்பாசறையாளர் என்ற விருதை வென்றிருக்கின்றனர். இவர்களுக்குச் சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம் தனது பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லறத் தேரின் அச்சாணி பெண்



அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு முதலிய நான்கும் பெண்ணிடம் இருப்பது மிக மிக அவசியமாகும். "நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்" என்று மகாகவி பாரதி கூறியதைத் தவறாகப் புரிந்துகொள்ளக் கூடாது. அஞ்ச வேண்டிய இடத்தில் அஞ்சுவது, நாணவேண்டிய இடத்தில் நாணுவது பெண்களின் இயற்கைக் குணம். காடையர் தாக்கும் போது அஞ்சக்கூடாது, தன்னைப் பாதுகாக்கவும், தனது பெண்மையைப் பாதுகாக்கவும் பெண்கள் தயங்கக் கூடாது. அவர்களுக்கு வேண்டிய வீரம் அவர்களுக்குள் இருக்கின்றது. உண்மையைக் கூறில் பெண்கள் ஆண்களிற் பார்க்க ஆத்மீகப் பலம் கொண்டவர்கள். அந்தப்பலத்தை அவர்கள் வளர்த்துக் கொண்டால் எந்த விதத்திலும் பெண்மை காப்பாற்றப்படும். அதற்கு அம்பாள் உத்தரவாதம் கொடுத்திருக்கின்றாள். அம்பாள் தோத்திரங்கள் அவற்றை நிதர்சனமாகக் காட்டுகின்றன.

பெண்கள் தான் சமுதாயத்தின் விதை நெல்லுகள். சகிப்புத்தன்மை, இரக்கம் போன்ற நன்மைகள் பெண்கள் இதயத்தில் குடிகொண்டிருத்தல் அவசியம். இவற்றைக் கைவிட்டு வீண் பொறாமை, பூசல், சூழ்ச்சி, போட்டி முதலிய துர்க்குணங்களில் ஈடுபடக்கூடாது. ஆக்க குணங்கள் அற்றுப்போனால், அழிவுக் குணங்கள் ஆட்சிபெறத் தொடங்கிவிடும். அவற்றால் பெண்களுக்கும் சமுதாயத்திற்கும் அழிவு நிலை ஏற்படும். இன்று எம் சமுதாயத்தில் பேரழிவு ஏற்பட்டதற்கும் முக்கிய காரணம் பெண்கள் தான் என்று கூறமுடியும். இல்லறத் தேரின் அச்சாணி பெண். அவர் சரியில்லை என்றால் வீடும் பாழடையும், நாடும் பாழடையும் என்பது திண்ணம். "பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோமடா" என்று பாரதி பாடியதில் ஆழ்ந்த கருத்துண்டு. அதைப் பெண்கள் உற்று நோக்குதல் அவசியமாகும். வள்ளுவப் பெருந்தகையும் பெண்ணைப்பற்றிக் கூறும் போது பின்வருமாறு கூறுகின்றான்.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள
கற்பெனும் திண்மை உண்டாகப் பெறின்"

என்று அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறான்.

**தொகுப்பு திருமதி செல்வம் கல்யாணசுந்தரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்வையால் நெருப்பு உண்டாக்கும் மணிப்பூரகத்தியானம்

தாழ்ந்த லோகங்களையும் அதாவது தங்கம், செம்பு, இரும்பு, ஈயம் போன்ற தாழ்ந்த உலோகங்களையும் தங்கமாக்கும் அற்புத வித்தையே இரசவாதமாகும் என்பதை இதுவரை அறிந்து கொண்டோம். இந்த இரசவாதத்திற்குப் பாதரசம் எத்தனை அவசியமானது என்பதையும் அறிந்தோம். பாதரசத்தை எப்படி ரசமாணியாக்கி அதன் மூலம் எத்தனை அற்புதங்கள் செய்ய முடியும் என்பதையும் பார்த்தோம். இவைக்கெல்லாம் மூலிகைகளின் துணை மிக அவசியம் என்பதனையும் புரிந்து கொண்டோம். இனி மனிதனுடைய சிறுநீரின் மூலம் கூட தாழ்ந்த உலோகங்களைத் தங்கமாக்க முடியும் எனச்சித்தர்கள் தந்த ஞான வித்தையைப் பார்ப்போமா?

அகஸ்தியரின் சீடர் போகமுனிவராவார். அவரே பழனி திருத்தலச் சிலையை நவபாஷணத்தால் வடித்தவர். அவரின் நேரடிச்சீடர்கள் புலிப்பாணியும், கருவூராரும், கொங்கணவரும் ஆவார்கள். கொங்கணவர் என்றவுடன் **"கொக்கென்று நினைத்தாயா? கொங்கணவா"** என்ற பழமொழி எல்லோருக்கும் ஞாபகம் வரும். இந்தப் பழமொழி எப்படி வந்தது? விபரத்தைப் பார்ப்போமா?

கொங்கணமாமுனிவர் மணிப்பூரகத் தியானத்திற் சிறந்தவர். மணிப்பூரகத் தியானம் என்றால் என்ன? என்ற கேள்விக்கு இங்கு எழும் மனித சரீரத்தில் ஆறு சக்கரங்கள் அமைந்துள்ளன. அவையாவன மூலாதாரம், சுவாதிஸ்டானம், மணிப்பூரகம், அனாதகம், விசுக்தி, ஆஞ்ஞா இந்த ஆறு சக்கரங்களிலும் குண்டலினி சக்தியை எழுப்பித்தியானிப்பவர்களே சித்தர்கள். இதில் ஒவ்வொரு சக்கரத்திற்கும் ஒவ்வொரு விதமான சக்தி உண்டு. இதில் மணிப்பூரகம் என்பது மனித சரீரத்தில் தொப்புள் குழியில் அமைந்துள்ளது. அங்கு பத்து இதழ்களைக் கொண்ட தாமரை வடிவிலான சூட்சும நாடிகள் உள்ளன.

## உதயமாகிய சிவத்திருமன்றச் செயற்பாடுகள்

வாரத் தோறும் சனிக்கிழமைகளில் பி.ப 4.00 மணிக்குச் சித்தாந்த வகுப்பும், ஞாயிற்றுக்கிழமைகளில் பி.ப 4.00 மணிக்குச் பண்ணிசை வகுப்பும் பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியில் நடைபெற்று வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த இடத்தில் சமானவாயு குடிகொண்டிருக்கின்றது. அங்கு ஜடராக்கினி எரிந்து கொண்டே இருக்கின்றது. ஜட என்றால் ஜடம் எனப்பொருள்படும். ஜடம் என்றால் உடம்பு என்பதே அதன் உள் அர்த்தம். ஆக ஜடராக்கினி என்பது ஜடத்தில் உண்டாகும் அக்கினி என்பதே அர்த்தமாகும். இந்த ஜடராக்கினியே நாம் உண்ணும் உணவை எரிப்பவை. அதன் மூலம் ஜீரணம் நடைபெறுகின்றது. அதாவது சமிபாடு நடைபெறுகின்றது. எனவே எவர் ஒருவர் மணிபூரகத்தில் தியானிக்கிறாரோ அவருக்கு அக்கினியைச் சித்திக்கும் வரம் கிடைக்கும். அதுமட்டுமல்ல அவர் நெருப்பில் நடப்பார். பார்வையால் நெருப்பை உருவாக்குவார். இந்த மணிபூரகத் தியானம் செய்பவரை அக்கினி சுடாது.

அப்படிப்பட்ட மணிப்பூரகத தியானத்தில் சிறந்தவர் தான் கொங்கணவர். இன்னொரு முக்கிய விடயம் என்ன வென்றால் மணிப்பூரகத் தியானம் செய்பவர்களுக்குத் தாழ்ந்த உலோகங்களையும் தங்கமாக்கும் ஆற்றல் கிடைக்கும். புதையல்களும் கிடைக்கும். ஆனால் சித்தர்கள் இந்த அற்ப ஆசையைத் துறந்து அதையும் விட மேலான மோட்சத்துக்காகப் பாடுபட்டுத் தியானிப்பார்கள். இந்த மணிப்பூரகத்தை விழிப்படையச் செய்யக் குண்டலினி சக்தியை எழுப்பிவிட உண்டான பீஜ மந்திரம் "ஓம்ரம்" என்பதாகும்.

இத்தகைய அற்புத மணிப்பூரகத்தியானத்திற் சிறந்தவரான கொங்கணமாமுனிவர் ஒரு நாள் ஓர் மரத்தின் கீழ் அமர்ந்து மணிப்பூரகத் தியானத்தில் ஆழ்ந்து விட்டார். தியானம் கலைந்து அவர் விழிக்கும் போது அவர் தலையில் கொக்கொன்று எச்சம் இட்டுவிட்டது. அடுத்த வினாடி அண்ணாந்து பார்த்தார். அவரின் பார்வை கொக்கை எரித்து விட்டது. அவர் வேண்டும் என்று செய்ய வில்லை. தன்னையும் அறியாமல் அவரின் தவக்கனல் கண்களின் வெளியேபாய்ந்து கொக்கை எரித்து விட்டது.

**Dr. Pa. Suresh (S.M.P. India) Hatton**

## Jumbled Words

**Hi friends, These are jumbled Up Sort them out correctly**

1. Leanueezv
2. Saalamyi
3. Inaanzat
4. Goalrput
5. Nimevat
6. Vgaoyloasi
7. Greatanni
8. Loisaam
9. Toracasic
10. Moonreac

**Mr. Jumble Up**
**No. 3, Ridgeway Place**
**Colombo - 4**

**Mr. Jumble up (2)**
**Win**
**Miss. Sharmila**
**28/01 A, Kassapa Road,**
**Colombo - 05**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருக்குறள் அறத்துப்பால்

கம்பவாரிதி இ. ஜெயராஜ்

## அதிகார வைப்பு முறை *(சென்ற இதழ் தொடர்ச்சி)*

*பிறனில் விழைதல், அழுக்காறு. வெஃகல் முதலிய,*
*மனக்குற்றங்களை வகுத்தவர்,*
*தொடர்ந்து,*
*மேற்கூறிய மனக்குற்றங்களால் விளையும்.*
*மொழிக்குற்றங்களைச் சுட்டுகிறார்.*
*அம்மொழிக்குற்றங்கள்,*
*பொய், புறங்கூறல், கடுஞ்சொல், பயனில்சொல் என நான்காம்.*
*இவற்றுள் பொய், புறங்கூறல் (குறளை), கடுஞ்சொல் என்பன*
*சமுதாயத்தைச் சிதைப்பன.*
*பயனில் சொலல் தனிமனித ஆளுமையைச் சிதைப்பது.*
*சமுதாயத்தைப் பாதிக்கும் மொழிக் குற்றமான பொய்*
*துறந்தாரால் மட்டுமே முற்றாய்க் கடியக்கூடியதாகலின்*
*அதனை துறவறவியலில் வாய்மை எனும் அதிகாரத்தால் கண்டித்தார்.*
*அடுத்ததான கடுஞ்சொல்லினை இல்லறவியலில்.*
*இனியவைகூறல் அதிகாரத்தால் கண்டித்தார்.*
*இவை போக,*
*சமுதாய மொழிக்குற்றத்துள் எஞ்சியதான புறங்கூறலும்,*
*தனிமனித மொழிக்குற்றமான பயனில சொலலும்*
*அடுத்துவரும்*
**"புறங்கூறாமை", "பயனிலசோல்லாமை"** *எனும் அதிகாரங்களால்,*
*கண்டிக்கப்பட்டன.*
*இக்காரணங்களால் இவ்விரு அதிகாரங்களும் அடுத்து*
*வைக்கப்பட்டன.*

*மன, மொழிக்குற்றங்களைக் கண்டித்து,*
*பின் மெய்யின்கண் தோன்றுவனவாகிய,*
*பாவங்களையும் கண்டித்தார்க்கே,*
*அன்பின் விளைவு பூரணப்படுமாகலின்,*
*தீவினைக்கு அஞ்சுக! எனக்கூறும்,*
**"தீவினைஅச்சம்"** *அடுத்த அதிகாரமாயிற்று.*

*மேற்கூறிய நல்லவை செய்து அல்லவை அகற்ற,*
*இல்லின்கண் தோன்றிய அன்பு,*
*சமுதாய அளவில் விரிந்து பூரணப்படும்.*
*அதனால் சமுதாயத்தின் ஓர் அங்கமே தான் என உணர்ந்து,*
*அச்சமுதாய நலனுக்காய் இல்வாழ்வான் பாடுபடத் தொடங்குவான்.*
*அங்ஙனம் உலகம் பேணும் அவசியம் உணர்ந்து,*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஞ்சிப் பெரியவரின் மனவேதனை இலங்கைப் பிராமணர்களுக்குப் பொருந்துமா?

பிராமணனிடம் மற்ற எல்லா ஜாதியரும் குறைவில்லாத அன்பும், மரியாதையும் காட்டிவந்தனர். இவனையே உதாரணமாக, வழிகாட்டியாக, முன்மாதிரியாக வைத்துக்கொண்டார்கள். பிராமணனே புத்தியால் ஆகிற காரியங்களை ஆயிரம், பதினாயிரம் வருடங்களாகச் செய்துவந்திருக்கிறான் அல்லவா? ஆதியிலெல்லாம் இவனுடைய புத்தி கொஞ்சம்கூடத் தன்னலனுக்குப் பிரயோசனமாகாமல் சமூக சேஷமத்துக்காகவே அர்ப்பணிக்கப்பட்டு வந்தது. இந்தத் தியாக விசேஷத்தாலேயே அது பிரகாசமாகச் சாணை தீட்டிய கத்தி மாதிரிக் கூர்மையாக இருந்தது. இப்போது இவனுக்கு சமூக சேஷம நோக்கம் போய்த் தன்னலமான இலௌகிக ஆசைகள் எல்லாம் வந்தபின் அந்தப்புத்திப்பிரகாசம் மருங்கவேண்டியதுதான். இவனுக்கென்று கடமைகளைச் செய்யவே முன்பு இவனுக்குப் புத்தி வன்மையும், பகவத் பிரசாதமாகக் கிடைத்திருந்தது. கடமையை விட்டபின் அந்தப்புத்திக்கூர்மை மருங்க வேண்டியதுதான்.

துவேஷம் இரட்டிப்பாகிற மாதிரி பிராமணனே இன்னொன்றும் செய்தான். ஒரு பக்கத்தில் ஜாதி தர்மத்தை விட்டுவிட்டு இவனும் வெள்ளைக்காரனோடு சேர்ந்து; பழைய ஏற்பாடு காட்டுமிராண்டித்தனமானது, ஒருத்தரை இன்னொருத்தர் சுரண்டுவது கூடாது என்றெல்லாம் சமத்துவம் பேசினாலும், இன்னொரு பக்கம் இவன் மற்றவர்களோடு ஒட்டிப்போகாமல், தான் ஏதோ உசத்தியென்று பெருமை கொண்டாடிக் கொண்டான். முன்பும் இவன் மற்றவர்களோடு ஸ்தூலமாக ஒட்டிப்பழகத்தான் இல்லை. ஆனால் அதற்கு நியாயம் இருந்தது. பலவித காரியங்களை உத்தேசித்து, அவரவருக்கும் ஆகாரம் முதலியவற்றிலும் மற்ற விஷயங்களில் வித்தியாசங்கள் இருந்தாக வேண்டியிருக்கின்றன. அவர்கள் வேறு வேறு விதமாக சூழ்நிலைகளில் இருந்தாக வேண்டியிருக்கின்றனர்.

ஆகாரம் வேறாக இருப்பதால் பிராமணனுக்கும், சஷத்திரியனுக்கும் துவேஷம் என்று அர்த்தமாகுமா? அதற்காகத் துவேஷமில்லையே என்று இவன் ஸ்தூலமாக அவனோடு ஒட்டி வாழ்ந்தால் அவனுடனேயே உட்கார்ந்து கொண்டு இவரும் சாப்பிட்டால் அவனுடைய ஆகாதிகளை நாமும்தான் ருசி பார்ப்போமே என்ற சபலம் உண்டாகத்தான் செய்யும். அந்தந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயத்திற்கு அந்தந்தக் குலதர்மம் பழக்க வழக்கம். ஆகார முறைகள்தான் உசந்தவை. இப்பொழுது அவர்களோடு நானும் ஒன்று எல்லோரும் சமன் என்று சொல்லிக்கொண்டே அவர்களுடைய வயிற்றெரிச்சலுக்குக் காரணமாக எல்லா ஸ்தானங்களுக்கும் போட்டியாக வந்துவிட்டான். இது போதாது என்று நியமங்களில் அவர்களை விடத்துளிகூடக் கட்டுப்பாடு இல்லாமல் வாழ்ந்தாலும் உள்ளூற அவர்களைவிடத்தான் உயர்ந்தவன் என்று நினைத்துக் கொண்டிருந்தால் மற்றவர்களின் துவேஷம் ஜாஸ்தியாகத்தானே செய்யும்?

"தானும் கெட்டு, சந்திர புஷ்கரணியையும் கெடுத்தானாம் என்கின்ற கதையாகப் பிராமணன் தானும் தர்மத்தை விட்டு, மற்றவர்களும் அவரவர் தர்மத்தை விடுகின்றமாதிரி செய்துவிட்டான்." தன் தர்மத்தை விட்ட பின் இவனுக்கு உயர்வு எதுவுமே இல்லை. தன் தர்மத்தைச் செய்த போதுகூட, இவனாக உயர்வு பாராட்ட நியாயமில்லை. ஒவ்வொருவரும் ஒன்றைச் செய்கிறார்கள் நான் இதைச்செய்கிறேன் என்றுதான் அடக்கமாக இருக்க வேண்டும். ஆனால் தன்னலமில்லாமல் கடும் விரதநியதிகளோடு இவன் தூய்மையாக வாழ்வதைப் பார்த்து மற்றவர்களே இவனுக்கு ஒரு ஏற்றம் கொடுத்துக் கௌரவித்து வந்தார்கள். இப்பொழுது அதற்கெல்லாம் வட்டியும் முதலுமாக எல்லாரும் தன்னைத் தூற்றும்படி, கரித்துக் கொட்டும் படி இவனே ஆக்கிக் கொண்டு விட்டான்.

தொகுப்பு

**S. சித்திரரூபி**

(சனாதனதர்மக்கழகம்)

---

**நுவரெலியாவில் நடைபெற்ற மாபெரும் தைப்பொங்கல் கலை கலாச்சார நிகழ்ச்சி**

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு 15.01.2001 நுவரெலியா புதிய நகரசபை மண்டபத்தில் நுவரெலியா இந்துக்கலாச்சாரப் பேரவையின் மாபெரும் விழா மத்திய மாகாண இந்துக்கலாச்சாரப் பேரவை சூரியன் F.M ஆதரவில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பல்லின மக்களும் கலந்து சிறப்பித்திருந்தனர். நலிவுற்றிருந்த மக்களை முன்னுக்குக் கொண்டுவரும் நிகழ்ச்சியாகவும், தேசிய நல்லிணக்கத்தை மேம்படுத்தும் நிகழ்ச்சியாகவும் அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறுபிறப்பின் மறைவில் மறைந்திருக்கும் மர்மம் என்ன?

ஆத்மா தான் செய்யும் வினைகளுக்கேற்ப மறுபிறவியை நாடிநிற்கின்றது எனக் கண்டோம். இந்த ஆத்மா தான் இவ்வளவு காலமும் உறைந்து வந்த உடலை விட்டு நீங்கிய உடன் என்ன செய்யும்? என்ற வினா எழலாம். ஒருவனுக்கு மரணம் என்பது பலவழிகளில் சம்பவிக்கலாம். சிலர் திடீர் என்று இறக்கின்றார்கள். சிலர் விபத்துக்களால் இறக்கின்றனர். சிலர் நோய்வாய்ப்பட்டு நெடுங்காலமாகப் படுக்கையில் இருந்து இறக்கின்றனர். சாதாரணமாக ஒருவன் இறக்கும் போது அவனுடைய உடம்பு வேதனையும், இளைப்பும், பலவீனமும் அடைகின்றது. புலன்கள் மயங்குகின்றன. மனம் திகைப்பும், கலக்கமும் அடைகின்றன. சடுதியாக ஆன்மா உடம்புக்கு வெளியேதான் நிற்பதைக் காண்கின்றது, ஆச்சரியப்படுகின்றது. உற்றார், உறவினர், பிள்ளைகள் மூலைக்கு மூலை விம்மி விம்மி அழுவதைக் கேட்கிறது. பலர் போலிக் கண்ணீர் வடிப்பதைக் காண்கிறது. முதலில் திகைப்படைகிறது. எனினும் பின்பு இதுவே மரணம் என்பதை உணர்ந்து ஆறுதலடைகின்றது.

ஆனால் எதிர்பாராத விதமாக ஒருவன் விபத்தில் இறப்பின் அந்த ஆத்மாவின் அனுபவம் வித்தியாசமாக இருக்கும் என மேனாட்டறிஞர்கள் சொல்கிறார்கள். ஒரு கணநேரம் தாங்க முடியாத கடும் வேதனை, திடீர் அதிர்ச்சி, சடுதியாக ஆன்மா உடம்புக்கு வெளியே நிற்கின்றது. தான் மரணமடைந்ததையும் உடம்புக்கு வெளியே நிற்பதையும் ஆன்மா உணராது, ஒப்புக்கொள்ளாது. வண்டி உடைந்து கிடப்பதையும் மக்கள் கூட்டமாகக் கூடுவதையும், சிலர் இறந்தவரின் உடம்பை எடுத்து வெளியே கிடத்துவதையும் ஆன்மா காண்கின்றது. இந்த விபத்தில் அகப்பட்டவன் யார் என ஆச்சரியப்படுகின்றது. தானே அகப்பட்டவன் என்பதை ஆன்மா உணருவதற்குச் சில காலஞ்செல்லும்.

நோய்வாய்ப்பட்டு இறக்கும் ஆன்மா உடம்பினை விட்டு நீங்கிய உடன் எல்லா நோய்களும் அற்றுப் போய்விடுகின்றன. ஆன்மா அமைதியும், சாந்தியும் அடைகின்றது. உணர்ச்சிகள் பெரும்பாலும் இன்பகரமானவையாக இருக்கும். இவ்வாறு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவகையான உடலை விட்டு நீங்கும் ஆத்மாக்கள் பௌதீக உடம்பை விட்டு நீங்கிய போதிலும். இறந்தபின் புதியவொரு நுண்ணிய சூக்குமமான உடம்பைப் பெறுவதைப்போல் உணர்கின்றது.

ஒருவன் இவ்வுலகில் ஆசாபாசங்களுடன் வாழ்வானாயின் அவனது ஆன்மா ஆவியுலகிலும் ஆசாபாசங்களுடன் அலைந்து திரியும் என்று கூறப்படுகின்றது. உடலைவிட்டு நீங்கிய ஆன்மா இவ்வுலகில் தனக்கு முன்பு இறந்தவர்களுடன் இணைகின்றது. சிலகாலம் ஆவியுலகிற் தங்கிய பின் மீண்டும் மறுபிறப்பு எடுக்கின்றது என மேனாட்டறிஞர்கள் கூறுகின்றார்கள்.

இந்துசமய நூல்களின்படி உடலை விட்டுப்பிரியும் உயிரானது எமன் உலகிற்குச் சென்று அங்கு ஆத்மாக்கள் செய்த புண்ணிய பாவங்களுக்கேற்ப சுவர்க்கத்தையும், நரகத்தையும் அடைந்து பயன்களை அனுபவித்த பின்பு ஆன்மா மறுபடியும் இவ்வுலகிற் பிறக்கின்றது. சில ஆன்மாக்கள் உடனேயே மறுபிறவியை நாடி நின்று சில காலங்களில் மறுபிறவி எடுக்கின்றது. வேறு சில ஆத்மாக்கள் உடனே மறுபிறப்பை நாடி நிற்பது இல்லை. தனக்குரிய காலம் வரும் வரை ஆவியுலகிற் சஞ்சரிக்கின்றன. ஆவியுலகு என்னும் போது ஏதோ புதிய உலகம் என்று நாம் எண்ணக்கூடாது. இறந்த ஆத்மாக்கள் ஒன்று கூடி இயங்கிக் கொண்டிருக்கும் இடமே ஆவியுலகம் எனப்படுகின்றது.

ஆவி, பேய் என்ற பதங்கள் உலகைவிட்டுப் பிரிந்த ஆத்மாவிற்குக் கிறிஸ்தவம் போன்ற பிற மதங்கள் இட்ட பெயராகும். பேய் என்றும், ஆவி என்றும் நாங்கள் பொதுவாக இறந்த உடலை அழைப்பது வழக்கமாகும். "ஒருவர் மரணமடைந்த உடன் அவரது ஆவி அங்கு சுற்றிக் கொண்டே இருக்கும்" என்று நம்முன்னோர்கள் கூற்றின்படி, நாம் இன்று கூடக்கூறிக்கொள்வது வழக்கம்.



தொகுப்பு
**G. சுமதி, M. வாணிதாஸ்**
(சனாதன தர்மக்கழகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணத்தை வெல்லும் மருந்து திருமந்திரம்

சனாதன தர்மத்தின் தலையாய சாதனை நூல் திருமந்திரமாகும். திருமூலநாயனார் அருளிய 3000 திருமந்திரங்கள், மக்கள் அவரவர் நிலையில் நின்று அறம், பொருள், இன்பம், வீடு முதலிய நான்கு புருஷார்த்தங்களையும் அடைந்து இன்புற உறுதுணை புரிகின்றன. உதாரணத்திற்குக் கீழ்க்காணும் திருமந்திரம் ஒன்றே போதுமானது.

**புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை**
**நெறிப்பட உள்ளே நிர்மலமாக்கில்**
**உறுப்புச் சிவக்கும் உரோமம் கறுக்கும்**
**புறப்பட்டுப் போகான் புரிசடையோனே.**

***திருமந்திரம்***

பிராணவாயு என்பது உடலில் இருந்து வெளியே புறப்பட்டு, மறுபடி அது உள்ளே புகுந்து, பல உறுப்புக்களுக்கும் பரந்து திரிகின்றது. இந்தப்பிராண வாயுவை இப்படிப் பரந்து திரிய விட்டால், உடற்சுகமும், மனச்சுகமும் கெட்டுவிடும். எனவே மேற்படி பிராணவாயுவை எல்லா இடத்திலும் முறையின்றித் திரிய விடாமல், முறையே இடகலை, பிங்கலை, சுழுமுனை நாடிகளில் முறையாக ஓடவைத்துச் சுத்திகரித்தால் இரத்தமும், நாடிகளும் சுத்திகரிக்கப்பட்டு, உறுப்புச்சிவக்கும். உரோமம் கறுக்கும், இளமை நிலைத்துச் சுகம் பெருகும் என்கின்றார் திருமூலர். இது அவரின் அனுபவ வாக்கு எல்லோரும் இதை அடைய முடியும் என்பது மறுக்க முடியாத உண்மை.

இதைச் சாதனை செய்யும் முறையைக் குருமூலம் கற்க வேண்டும். பிராணாயாமம், தியானம் மூலம் இந்தச் சாதனை செய்யப்படல் வேண்டும். அழகாய் இருப்பதற்கு மருந்தோ, செயற்கை அழகுச்சாதனங்களோ வேண்டியதில்லை. பணவிரயமும் தடுக்கப்படும். உலக வாழ்வில் வீண்கவலை கழிவிரக்கம், பொறாமை, பகை முதலிய தீமைகளையும் தவிர்க்க முடியும். உள்ள அழகு பெருகி விரியும். அனைவரையும் அரவணைக்கும் அன்பு முதிர்ச்சி உண்டாகும். எனவே அன்பர்களே, இன்றே சாதனை செய்ய விரையுங்கள்.

***திருமூலர் சங்கம்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதுளை ஸ்ரீ இராமகிருஷ்ண விவேகானந்தப் பேரவை கார்த்திகை, மார்கழியில் ஆற்றிய பணிகள்.

நிவ்வேழ்க தோட்டத்தில் உள்ள அறநெறி ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டது.

தெமொதர தோட்டம் தொழிற்சாலைப் பிரிவில் "திருவிளக்கு வழிபாடு" பூஜை மங்காரூபனி பக்தர்கள் குருவுடன் சந்திப்பும் கலந்துரையாடலும் தோட்ட ஆலயத்தில் நடைபெற்றது.

சார்னியா தோட்டம் தங்கமலைப் பகுதியில் உள்ள 80 குடும்பங்களில் 20 ற்கு மேற்பட்ட குடும்பங்கள் மதம் மாறியுள்ளமையை அறிந்து கொண்டமையால் பெரும் சிரமங்களுக்கு மத்தியிலும் காயத்திரி அறநெறிப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்படுகிறது.

# மக்கள் மதிக்கும் மாசிமகம்

குரு சிம்மராசியில் வரும் மாசிமகத்தில் எல்லோரும் நீராடித் தங்கள் பாவங்களைப் போக்குவதால் **மகாமகம்** என்ற சிறப்புப் பெயர் ஏற்பட்டுள்ளது.

மனிதர்கள் பாவங்களைப் போக்கிக் கொள்ளப் பல வழிகள் கூறப்பட்டுள்ளன. அவ்வழிகளில் தீர்த்தஸ்நானம் மிகச்சிறந்தது. கங்கை, யமுனை முதலிய நதி மாதாக்கள் "எங்களில் மூழ்கி நீராடுபவர்கள் பாவங்களை நாங்கள் ஏற்கிறோமே அதை நாங்கள் எங்குபோய்த் தீர்ப்பது" என்று சிவபெருமானிடம் முறையிட்டார்கள். அதற்குச் சிவபெருமான் அவர்களை கும்பக்கோணம் மகாமகக் குளத்தில் போய் தங்கச்சொன்னார்கள். மகாமகத் தீர்த்தத்திற்கு "மகாமகத்தீர்த்தம்" மகா தீர்த்தம் என்று பெயர். அகம் என்றால் பயம் என்றும் அர்த்தம், "மா" என்றால் தொடாது என்று பொருள். மகா மகத்தன்று இக்குளத்தில் ஸ்நானம் செய்தால் கங்கா தீர்த்தத்தில் 100 வருஷம் வசித்து மூன்று காலம் கங்காஸ்நானம் செய்த பலன் கிடைக்கும் என்று கூறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மகாமக ஸ்நானத்துக்குப் பின் கோவிலில் உள்ள ஒன்பது சன்னிதைகளை வழிபட வேண்டும். ஒன்பது முறங்களில் புஷ்பம், குங்குமம், தேங்காய், வெற்றிலை, பழம், வஸ்திரம் இவற்றை வைத்து அவற்றின் மீது மற்றொரு முறத்தால் மூடி ஒன்பது சுமங்கலிப் பெண்களுக்குத் தானம் செய்தால் எமக்கு நல்ல பலன் கிடைக்கும் எனக்கூறப்படுகின்றது. இலங்கையில் மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்திலும், மட்டக்களப்பு ஸ்ரீ மா மாங்கேஸ்வரர் ஆலயத்திலும் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

பன்னிரண்டு புஷ்கரங்கள் உண்டு. அவற்றுள் குரு சிம்மத்தில் இருக்கும் போது அவருடன் பூரணைச்சந்திரன் சேருவதால் உண்டாகும் பௌர்ணமியே காவேரி புஷ்கரம் என்று கூறப்படுகிறது. அன்று மகநட்சத்திரமாக இருக்கும். ஆகவே மகாமகம் என்று அழைக்கப்படுகின்றது.

**பிரம்ம ஸ்ரீ வா. சத்திய நாராயணன்**
**ஸ்ரீ மகாவிஷ்ணு கோயில் தெஹிவளை.**

# புராண இதிகாசங்கள் உண்மைக்குப் புறம்பானவையல்ல....

***பேராசிரியர் சாந்தையூர் சக்திவேல்***



வானியல் மேதை சம்பத் ஐயங்கார் தொன்மை வரலாற்றை ஆய்வு செய்தமை மூலம் எமக்குக் கிடைக்கப் பெற்ற இதிகாச புராணங்கள் கற்பனை அல்ல உண்மையாக நிகழப் பெற்றவை எனும் முடிவுக்கு வரமுடிகிறது.

"இலங்கைக்கு அனுமான் சென்ற வழி" என்று ஆங்கிலப் புத்தக ஆராய்ச்சி மூலம் வால்மீகியை நன்கு ஆராய்ந்த சம்பத் ஐயங்கார் சில புதியகால நிர்ணயங்களைத் தந்தார். கி.மு. 7000 இல் விசுவாமித்திரரும், கி.மு. 3000 இல் வியாசரும், கி.மு 4400 இல் வான்மீகியும் வாழ்ந்த சிறந்த வானியல் மேதைகளாவர். இதிகாசங்கள் வெறும் கவிதைகள் அல்ல. வானியலுக்கு ஆதார நூல்கள் என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமான் முதலில் விந்திய மலைக்குத்தான் போனார். அங்கிருந்து கடற்கரை வழியாக மகேந்திர மலைக்குச் சென்றார். அங்கிருந்து நானூறு மைல்கள் கடந்து இலங்கையை அடைந்தார். ஒரு மாசி பௌர்ணமி அன்று இலங்கையை அடுத்த மலை பர்வதத்தில் இறங்கினார். அது கி.மு 4401 இல் நடைபெற்றது.

சீதையைக் கண்டு சூடாமணியுடன் திரும்பி வந்த அனுமான் இராமனிடம் நிகழ்ச்சிகளை யெல்லாம் தெரிவித்தார். இராமர் இன்றைய பாலக்காடு பகுதி (அது தான் மிக கிட்டிய தூரம்) வழியாக மகேந்திரமலை சென்று அங்கிருந்து இலங்கையை அடைந்தார். இராமர் கடலில் கட்டிய அணை எர்ணாக்குளத்திற்குத் தெற்கே அமைந்திருந்தது. பின்பு கடலில் மூழ்கியது.

வானியல் மேதை சம்பத் ஐயங்கார் தனது ஆராட்சி மூலம் கீழ்க்காணும் முடிவுகளைத் தருகிறார்.

1. **இராமருடைய அவதாரம் சைத்திர சுக்கில நவமி அதாவது ஜனவரி 10 கி.மு. 4439**
2. **இராமர் கானகம் புறப்பட்ட நாள் சைத்திர சுக்கில சப்தமி கி.மு. 4414**
3. **அனுமான் இலங்கையை அடைந்த நாள் மகா சதுர்த்தசி பௌர்ணமி இலங்கைக்குள் புகுந்தார்.**
4. **இராமனின் பட்டாபிஷேகம் கொண்ட நாள் சைத்திர சுக்ல சப்தமி கி.மு 4400 அது ஒரு வெள்ளிக்கிழமை.**
5. **இராமன் சோதிக்கு எழுந்தருளியது கி.மு 4377.**

இவ்வளவு துல்லியமாகக் கணிப்பதற்கு வான்மீகியின் குறிப்புக்களே ஆதாரமாக இருந்தன.

இலங்கையில் இருந்து தென்துருவம் 6250 மைல் தொலைவு என்கிறார் சம்பத் ஐயங்கார். இன்றைய கணிதப்படி அது ஒத்து வருவது ஆச்சரியம்தான். அனுமான் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு 150 அல்லது 160 மைல் வேகத்தில் வந்தார் என்றும் இமயமலையிலிருந்து சஞ்சீவியை ஏந்திக் கொண்டு இலங்கை திரும்பிய வேகம் (ஜெட் விமானவேகம் 500) மைல் என்றும் கணித்திருக்கின்றார் சம்பத் ஐயங்கார்.

21ம் நூற்றாண்டின் மத்தியில் பூமியில் கரியமிலவாயு இரண்டுமடங்காக அதிகரிக்கும். பூமியில் வெப்பம் 1.50 செ.முதல் 4.5 செ. அளவில் இருக்கும். இந்த வெப்பத்தினால் பனிப்பாறைகள் உருகிப்பெருகுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. கி.மு 20,000 ஐ ஒட்டி உருவான பனியுகம் கி.மு 16,000 அளவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சநிலையடைந்த பனியுருகத் தொடங்கியிருக்கின்றது. பனிப்பகுதிகள் உள்வாங்கின காலத்தில் மனித இயக்கம் தோன்றியது. கி.மு 9000 ஐ ஒட்டி இந்த நிலை முடிவிற்கு வந்திருக்கலாம். அடுத்த பனியுகம் கி.பி 5000 அல்லது 6000 ஒட்டி நடக்கலாம்.

சம்பத் ஐயங்காரின் இந்தக் கணிப்புகள் இந்தியாவில் நாஸாவில் உள்ள சுற்றுச் சூழ் நிலைப் பாதுகாப்பு நிறுவனத்தின் கணிப்புகளோடு பொருந்தியிருக்கின்றது என்பது கவனிக்க வேண்டிய விடயம். சம்பத் ஐயங்காரை எரிக்வான் டானிகென், ஆர்.பி. அன்ஜார்ட் முதலிய அறிஞர்கள் அடையாளம் கண்டுபாராட்டியுள்ளார்கள்.

## வாசகர்களிடமிருந்து......

எம். தேவகி
பாடசாலை வீதி,
ஆலையடி வேம்பு.

சங்கநாதம் சிறந்ததொரு தலைப்பாகும். கவரக்கூடயது தொன்று என்னவென்றால் சங்கநாதத்தில் சங்கமமாகும் படைப்புக்கள் யாவும் இந்துக்களின் (தமிழரின்) மனங்களில் சங்கமாக வேண்டும்.

**Smt, Girija Seshadri**
**Postal Colony, IV Street,**
**West Mambalam, Chennai - 600033**
**India.**

சங்கநாதம் மாதாந்த இதழ் மிக நன்றாக வெளிவந்து கொண்டிருக்கின்றது. இதில் இந்துக்கள் பெண்கள், திருக்குறள், விரதநாட்களின் அட்டவணை, கேள்வி பதில், ஆலயவரலாறு போன்ற அம்சங்கள் மிகச்சிறப்பாக உள்ளன. தாங்கள் செய்யும் இந்தச்சிறந்த சேவைக்கு என்னுடைய ஆசிகள்.

**S. Vedantam**
**Vishva Hindu Parishad T. Nagar,**
**Chennai - 600017 India.**

சங்கநாதம் நல்ல தரமான முறையில் தொகுக்கப்பட்டு மிகவும் பயனுள்ளதாக அமைக்கப்பட்டுள்ளது. தங்கள் இயக்கமும், பத்திரிகையும் இலங்கைவாழ் இந்துக்களிடையே பெரும் செல்வாக்குப் பெற்று பெரும் வளர்ச்சி அடைய வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்கச்சி இ. சுவாமிநாதன் (இந்தியா)

# வாசனை விஞ்ஞானம்

மலரும் நினைவுகள் ங்கற வார்த்தையை இப்ப அடிக்கடி சொல்லிக்கிட்டிருக்கோம்லே, அதைப்பத்தி இப்ப வேறே விதமா ஒரு ஆராய்ச்சி பண்ணுவோம்.

மலருக்கும் நினைவுக்கும் சம்பந்தம் உண்டா? இதுதான் கேள்வி. இதுக்கு 'உண்டு'ன்னுதான் பதில் சொல்ல வேண்டியதாயிருக்கு! ஏன்னா.... வாசனைகளுக்கும், பழைய நினைவுகளுக்கும் தொடர்பு இருக்குங்கிறதை விஞ்ஞானிகள் கண்டுபிடிச்சிருக்காங்க!

நல்லதோ, கெட்டதோ ஒரு நிகழ்ச்சி ஒரு வாசனையோட சம்பந்தப்பட்டிருந்தா அது சுலபமா மறந்து போறதில்லே என்னு அவங்க சொல்றாங்க! ரெண்டு நண்பர்கள் ஒரு தெரு வழியா நடந்து போய்க்கிட்டிருந்தாங்களாம். யார் வீட்டுலேயோ மசால் வடை போடற வாசனை அவங்களுக்கு எட்டியிருக்கு.

உடனே அவங்களுக்குப் பழைய ஞாபகம் வந்திருக்கு மலரும் நினைவுகள்! பள்ளிக்கூடத்துலே படிச்சிக்கிட்டிருந்தப்போ வகுப்புலே மசால் வடையை மறைச்சி வச்சி சாப்பிட்டு அது வாத்தியார் கண்ணுல பட்டு-திட்டு வாங்கினது ஞாபகத்துக்கு வந்தது.

ஒரு மசால் வடை வாசனை அந்த நண்பர்களை 25 வருஷத்துக்கு முன்னாடி அழைச்சிக்கிட்டுப் போயிட்டுது. இது மாதிரியே ஒவ்வொரு வாசனைக்கும் பழைய ஞாபகத்தை வெளியே கொண்டுகிட்டு வர்ற ஆற்றல் இருக்குதாம்! ஜெர்மனியிலே ஒரு காலத்துலே மக்களுக்கு 'குளோரின்' வாசனை ன்னாவே ஒரு வெறுப்பு! அதனாலே அதை ஒருவரஷ காலத்துக்கு வேணாம் ன்னு சொல்லி தள்ளியே வச்சிருந்தாங்களாம். எதுக்கும் உபயோகப்படுத்துறதில்லையாம். ஏன் தெரியுமா? குளோரின் வாசனை அடிச்சாவே அவங்களுக்கு உலகயுத்தம் ஞாபகத்துக்கு வந்துடுமாம். என்ன காரணம் என்னா யுத்தச் சமயத்திலே குண்டு வீழ்ந்த இடங்களைச் சுத்தப்படுத்தறதுக்கு குளோரினை உபயோகப்படுத்தினாங்களாம். அதனாலே அந்த வாசனை பழைய சோகத்தை ஞாபகப்படுத்தி யிருச்சு! அதுதான் வேணாம்ன்னு சொல்லிப்புட்டாங்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்களை விடப் பெண்களுக்குத்தான் வாசனைகளைத் துல்லியமா அறியற சக்தி இருக்குன்னு ஆய்வாளர்கள் கண்டுபிடிச்சிருக்காங்க. ஓரிரு சின்ன சோதனைகூட பண்ணி பாத்திருக்காங்க. குழந்தை பிறந்த 6 மணி நேரத்துக்குப் பிறகு அந்தத் தாயோட கண்ணை கட்டிப்புடறது; அதுக்கப்புறம் சில குழந்தைகளை அவங்கிட்டே கொண்டு போறது; குழந்தையோட வாசனையை வச்சே எது தன்னோட குழந்தைங்கறதை அந்த அம்மா சொல்லிடுவாங்களாம்!

அதேமாதிரி குழந்தைகளும் ரொம்ப சமர்த்து! தாய்ப்பால் குடிக்கிற ஆறு வாரக் குழந்தைகள் வாசனை மூலமாவே தாய் யார்? தாதிப் பெண் யார்? அப்படிங்கறதை கண்டுபிடிச்சுடுதாம். ஒரு கெட்டிக்கார அம்மா, எட்டு வயசு வரைக்கும் தன் குழந்தையோட ஆடைகளை வாசனை மூலமாகவே கண்டுபிடிச்சுட முடியுமாம்! இதற்கு என்ன காரணம் தெரியுமா? தாய்க்கும், குழந்தைக்கும் உயிரியல், உடலியல் அடிப்படையிலே ஒரே விதமான வியர்வைச் சுரப்பிகள் தோலில் இருக்குமாம். (ஆனால் கணவனுக்கும் மனைவிக்கும் அப்படி இருக்கிறதில்லே!)

## கந்தபுராணக் கதையின் மறைபொருள்



நம் சமயக் கடவுட் கொள்கை பற்றிய படிநிலைகளில் இடம் பெற்றிருக்கின்ற சிவம், சக்தி, நாதம், விந்து என்பவற்றில் நாதம் சேவல் எனவும், விந்து மயில் எனவும் உருவகிக்கப்பட்டுள்ளன. இச்சாசக்தியே வள்ளி அம்மன் பெண்ணொருத்தி பக்குவம் அடைந்து விட்டாள் என்று கூறும் பொழுது, அப்பெண் உலகியல் வாழ்க்கையில் ஈடுபடும் பக்குவத்தை அடைந்துவிட்டாள் என்ற கருத்துப் பெறப்படுகின்றது.

இது போன்ற ஆன்மா ஒன்று இறைவனை அடைவதற்கு ஏற்ற பக்குவம் அடைந்த நிலையை வள்ளி அம்மன் என்னும் சக்தி குறிக்கின்றது. இத்தகைய ஆன்மாவை முருகன் தேடிச்சென்று ஆட்கொள்வான். இந்தக்கருத்தினைக் கந்தபுராணத்தில் முருகன் வள்ளியை இச்சித்துத் திருமணஞ் செய்தானென்ற கதை மறைமுகமாகப் புலப்படுத்துகின்றது. ஓர் ஆன்மா இறைவனுடன் சேர்தல் என்பது முத்தி பெறுதல் எனப்படும். முத்தி பெறுவதற்கு ஆன்மா இவ்வுலகிற் பிறப்பெடுத்தல் அவசியமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைச் சிவஞானசித்தியார்

மானுடப் பிறவிதானும் வகுத்தது
மனவாக் காயம்
ஆனிடத் தைந்தும் ஆடும் அரன்பணிக்
காக வன்றோ
வானிடத் தவரும் மண்மேல் வந்தான்
தனையர்ச் சிப்பர்
ஊனெடுத் துழலும் ஊமர் ஒன்றையும்
உணரார் அந்தோ.

என்று கூறுகின்றது. இந்தக் கருத்தினைக் கந்தபுராணம், மான் வயிற்றில் அஃதாவது மானிடத்தில் வள்ளியம்மை பிறந்தாளென்று சிலேடையாகக் கூறுகின்றது. மிருகத்தின் வயிற்றில் மனிதர் பிறக்க முடியுமென்றால், இது முன்பும் நிகழ்ந்திருத்தல் வேண்டும், இப்பொழுது நிகழ்தல் வேண்டும். இனி வள்ளி அம்மன் திருமாலின் மகள் என்பதால், மால் மகள் என்றாகி, மான் மகள் என்று திரிந்தது என்று கூறுவதுமுண்டு.

**ஆசிரியர் வே. வல்லிபுரம்**

## சைவத்தமிழ்ச்சேவையில் அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம்

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கமானது இந்தியா சைவசித்தாந்த மகா சமாஜத்தை தாய்ச்சங்கமாகக் கொண்டு 1960.03.30 இல் ஆரம்பிக்கப்பட்டது. இச் சங்கம் சைவமாநாடுகளை ஆண்டுதோறும் யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்கிளப்பு, கண்டி ஆகிய இடங்களில் நடாத்தி வருகின்றது. இச்சங்கமானது ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் இளஞ்சைவப்புலவர், சைவப்புலவர் தேர்வுகளை: சைவசித்தாந்தம், தமிழிலக்கணம், இலக்கியம், உரைநடை, சைவசமயவரலாறு ஆகிய பகுதிகளில் நடாத்திப் பட்டமளித்து வருகின்றது. இதற்குரிய விரிவுரை சனி, ஞாயிறு தினங்களில் வண்ணார்ப்பண்ணை நாவலர் பாடசாலையில் நடைபெறுகிறது. இச்சங்கமானது முதியோரை இளஞ்சமுதாயத்துடன் இணைக்கும் பாலமாகச் செயற்படுகிறது. இதை வளர்த்த பெருமை சைவப்புலவர் வ.கந்தசாமி அவர்களையே சாரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம் மாத்தளை

மேரு நாடுமிக்கிடை பிங்கலை
கூ.ரும் இவ்வானின் இலங்கைக்குறியும்
சாரும் தில்லைவனம் தண்மா மலையகத்து ஊடு
ஏறும் சுழுவை இவை சிவபூமியே
செந்தமிழ் ஆதிதெரிந்து வழிபடு
நந்தி இதனை நலம்பட உரைத்தனன்.

இலங்கை சிவபூமி என்பதுதான் திருமூலரின் அசைக்க முடியாத கருத்து. அத்தகைய இலங்கைத் திருநாட்டின் இருதயம் போல் இலங்குவது மாத்தளைப்பிரதேசம். இராவணனின் கோட்டையும் கொத்தளங்களும் அமைந்த பூமி இது. இராம, இராவண யுத்தத்தின் போது பாவிக்கப்பட்டதென நம்பப்படும் வில்லின் ஒடிந்த பகுதி இலக்கலை பீடபூமியிற் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இத்தகைய பழம் பெருமை வாய்ந்த இப்பிரதேசத்தில், கண்டியிலிருந்து திருக்கோணமலை செல்லும் நெடுஞ்சாலையின் 26ம் கி.மீ தொலைவிலுள்ளது ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்.

இக்கோயிலுக்கு மேற்கே அழகுமலை, கிழக்கே உன்னாஸ்கிரி, வடக்கே அஸத்தியா, தெற்கே பலக்கடுவத்தொடர் மலைகளும் அரண் செய்கின்றன. குறிஞ்சி, முல்லை, மருதம் ஆகிய மூவகை நிலங்களையும் கொண்டு திகழ்கின்ற மாத்தளை மாநகர் முன்பு **பண்ணாகமம்** எனும் பெயரைப்பெற்றிருந்தது. இயற்கையெழில் கொஞ்சும் இந்நகரில் இவ்வாலயம் தோன்றிய வரலாறு சுவையானது. 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில், அன்பர் ஒருவருக்குக் கனவில் தோன்றி குறித்தவிடத்தில் காணப்படும் கல்லிற்குத் தீபம் இட்டுவணங்குமாறு அம்பிகை கூறியதன் காரணத்தால் அக்கல்லுக்குத் தீபமிட்டு வணங்கியுள்ளனர். பின்னர் குடில் அமைத்துக் கோவிலாக வழிபட்டுக் காலப்போக்கில் 1852ம் ஆண்டளவில் கட்டடம் கட்டித் திருத்தி அமைத்து வழிபட்டுவந்தனர். ஆரம்பத்திலிருந்து வந்த ஆலமரச்சந்தியில் மிருக பலிகொடுக்கும் மரபு நிறுத்தப்பட்டுப், பூஜைகள் மட்டுமே நடைபெற்று வந்தன. பின்னர் படிப்படியாகத் திருவிழாக்களும் ஏற்படுத்தப்பட்டு, சப்பரம், தேர் எடுக்கும் வழக்கம் தோன்றியது. 1934ம் ஆண்டளவில் விநாயகர், சிவன், அம்பாள், முருகன் ஆகியோருக்கும் இரதோற்சவம் நடாத்தியுள்ளனர்.

1955 களில் இராஜ கோபுரம் சிறப்பாக அமைக்கப்பட்டது. அத்துடன் பழைய கட்டிடமானது திருத்தப்பட்டு விநாயகர், சுப்பிரமணியர் ஆலயங்களும் மகா மண்டபமும் நிர்மாணிக்கப்பட்டன. விஷ்ணு கோவில், நாயன்மார் கோவில், மீனாட்சி, சிவன் கோவில் என்பன புனரமைக்கப்பட்டன. 1960 இல் மூலகோபுர கும்பாபிஷேகமும் தொடர்ந்து ஸ்ரீ முத்து மீனாட்சி, சுந்தர சண்டேஸ்வரர், நடராஜர்சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன தனித்தனியாக அமைக்கப்பட்டு வசந்த மண்டபமும் அமைக்கப்பட்டது. சுற்று மதிலொன்றும் உருவாக்கப்பட்டது. 1968 இல் கொடித்தம்பமும் தொடர்ந்து மணிக்கோபுரமும் தனியாக நவக்கிரகமும் நிர்மாணிக்கப்பட்டன.

முன்னர் பதாதை **தகடைத்தேர்** எனும் இரதத்தில் நகர்வலம் வந்த அம்பாள் பின் விநாயகர், கலியுகவரதன், சிவன், அம்பாள் வருமளவிற்கு மூன்று தேர்கள் பவனி வந்தன. 1965ம் ஆண்டில் பஞ்சரதங்கள் உருவாக்கும் பணி ஆரம்பித்து 1977 இல் ஸ்ரீ சக்கர மரபுப்படி செய்த தேரில் அம்பாள் வலம்வரத் தொடங்கினாள். இத்தேரானது முதன்முதலாக 1977.03.04 அன்று வெள்ளோட்டம் கண்டது. இவ்வாறு உருவாகிய பஞ்சரதங்களிலே விநாயகர் முதலாவதிலும், கலியுகவரதர் இரண்டாவதிலும், சிவன் அம்பாள் மூன்றாவதிலும் முத்துமாரி அம்பாள் நான்காவதிலும், சண்டேஸ்வரி ஐந்தாவதிலும் வலம் வருகின்றனர்.

இவ்வாறாக 1992 இல் வசந்தவிமானக் கோபுரமும், தீர்த்தக்கேணியும் நிர்மாணிக்கப்பட்டு 1983 இல அழிக்கப்பட்டன. எல்லாம் மீண்டும் அமைக்கப்பட்டு இன்று புதுப்பொலிவுடன் திகழ்கின்றாள் எங்கள் முத்துமாரியம்மன். இவ்வாலயத்தினுள்ளே ஆனைமுகன், பஞ்சமுகவிநாயகர், முருகன், ஸ்ரீ விஷ்ணு, சரஸ்வதி, துர்க்கை, இலட்சுமி, நவக்கிரகங்கள், மீனாட்சி, நந்தி, நடராஜர், நான்கு நாயன்மார் ஆகியோர் பரிவாரமூர்த்திகளாகத் திகழ்கின்றனர். இங்கு காசியிலிருந்து எடுத்து வந்த சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

இத்தேவஸ்தானத்திலே தொன்றுதொட்டு இடம்பெற்றுவரும் அன்னதானமும், தீமிதிப்பும் இன்றுவரை நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இங்கு மாசிமகம்சிறப்பாகக் கொண்டாடப்படுவதுடன் வருடாந்த மகோற்சவமும் மாதாந்தத்தினங்களும் ஏனைய விழாக்களும் கொண்டாடப்படுகின்றன. மாத்தளையில் கோவில் கொண்டு மாதளையாகிய பிறவித்துன்பத்தை நீக்கும் அன்னையின் அருள் பொழிகின்ற மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயச்சிறப்பு எழுதப்பட முடியாதது! வர்ணிக்கப்படமுடியாதது!! எழுத்திலடங்காதது!!!

திரு நிற்சிங்கம். மாத்தளை

**அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மாசிமக மகோற்சவ விஞ்ஞாபனம்**

| | |
|---|---|
| கொடியேற்றம் | தேர்த்திருவிழா |
| 13.02.2001 | 08.03.2001 |

**திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம்**

கோபுரம் 66 உயரம், 25 அடி அகலம் முன்பக்கம், 7 கலசம், வேசரம் வட்டம், 7 படை, கட்டுமானம் செய்தது அராலியைச் சேர்ந்த சுந்ததாஸ் ரவீந்திரன் குழுவினர், கோயில் சிற்பாச்சாரியார் இந்தியா கும்பகோணத்தை சேர்ந்த வலைங்கமான ராஜேந்திரன் சபதி. வர்ணம் திருநெல்வேலி இ. கனகராஜ் குழுவினர். படை, புவதுர்க்கா அஷ்டலக்சுமி சக்திபீடம் கோயில் சரித்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸத்குரு ஸ்ரீ தியாக ராஜ ஸ்வாமிகள்



ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமியின் திவ்ய சரித்திரத்தை விவரிக்கும் நூல்கள் ஏற்கனவே பல வெளிவந்துள்ளன. ஆயினும் அவரைப்பற்றி வழங்கி வரும் வரலாறுகள் எவ்வளவு தூரம் ஆதாரபூர்வமானவை என்று நிச்சயிப்பது கடினம்.

தியாகராஜ சுவாமிகள் **காகர்ல** வம்சத்தில் ***முலக*** நாடு (முரிகிநாடு) திரிலிங்க வைதீக குலத்தில் அவதரித்தார். இவரின் தந்தை பெயர் இராமப் பிரம்மம். இவர் இராமாயணப்பிரசங்கங்கள் செய்வதில் நிபுணராய் விளங்கினார். திருவையாற்றில் நடைபெற்றுவரும் ராஜா ஸமஸ்கிருதக் கல்லூரியில் தியாகராஜர் கல்விகற்றார். தந்தையாகிய இராம பிரம்மம் அவருக்கு இராம தாரக மந்திரத்தை உபதேசம் செய்தார். தியாகராஜர் இராமநாம ஜெபத்தை இடைவிடாமல் செய்து வந்தார். ஒரு கோடிநாமங்கள் முடிந்த பின்னா இராமபிரான் அவன்முன் தோன்றி, ஒரு கணத்தில் மறைந்து போனார். இதனால் பரவசமடைந்த தியாகராஜர் அடாணா இராகத்தில் "ஏல நீ தய ராது" என்ற கிருதியைப் பாடினார். இவ்வாறே இரண்டுகோடி நாமங்கள் முடிந்த பிறகு அவர் "கநுகொண்டிநி", "நாத ஸீதா ரஸம் பிலநு" "உபசாரமு சேஸேவாரு, தொரகுநா இடுவண்டி ஸேவ" முதலியக்கிருதிகளை இயற்றினார்.

தியாக ராஜருக்குப் பதினெட்டு வயது நிரம்பிய போது பார்வதி என்ற பெண்ணை மணம் முடித்து வைத்தார். ஒருமுறை தனது தமயனுக்கு நோய் வந்தபோது, "அந்யாயமு ஸேயகுரா" என்ற க்ருதியைப்பாடித் தமயனின் நோயைத் தீர்க்குமாறு வேண்டினார். சிறுவயது முதலே தியாகப் பிரம்மம் மிகவும் தாராள குணம் படைத்தவராகவும், இசை மேதையாகவும் விளங்கினார்.

கர்நாடக சங்கீதத்தின் வாக்கேய காரர்களுள் எவ்விதத்திலும் தலை சிறந்தவரான ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் சங்கீத சாஸ்திர விற்பனராக விளங்கியதுடன், தலைசிறந்த மேதாவியும் ஆவார். இவர் பிரஹலாதன், நாரதர் முதலியவர்களுடன் ஒப்பிடத்தகுந்த பக்தி சிகாமணியாகவும், வைராக்கியம் நிறைந்த ஆத்ம ஞானியாகவும், சிறந்த கவியாகவும், இசை நாடகாசிரியராகவும் திகழ்ந்தார் என்பதில் ஐயம் இல்லை.

**தொகுப்பு பிரசாந்தி தகராஜ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிக்கு வழியும் உயர்வுக்கு முதற்படியும்.

மானிடப்பிறப்பே மற்றைய பிறப்புக்களை விட உயர்ந்தது. அவ்வாறிருக்கும் போது மனித வாழ்க்கையை நாம் எப்படி இழக்க முடியும்?

பிறப்பு, இறப்பு என்பது மனித வாழ்க்கையின் பலவீனத்தின் அறிகுறியாகும். இப்பூமியில் நாம் சாதித்தது யாது என்பதும் சாதிக்கப்போவது யாது என்பதும் அறிவதே வாழ்க்கையின் வெற்றியாகும். மானிடத்தில் அபாயகரமான சக்திகளும் ஆற்றல்களும் மறைந்திருக்கின்றன. அவைகளை அறியும தன்மைகளையும், வெளிப்படுத்தும் சமார்த்தியங்களையும் பெறுவது எவ்வாறு? என்பது வாழ்க்கையின் உயர்வுக்கான சந்தர்ப்பங்களாகும். மனிதப்பிறவியின் பயன் யாது? என்பதையும் அறிவது எங்களது பயனேயன்றி இறைவனது கடமையல்ல. "உயிரே இறைவன்" என்பது இந்துமதத்தின் மூலதத்துவமாகும்.

மனிதப்பிறவிக்கு மட்டுமே சிந்திக்கும் தன்மையும் எண்ணங்களை வெளிப்படுத்தும் ஆற்றல்களைக் கொடுத்துள்ளான் ஏன்? மனிதன் மனிதனாக வாழ்வதற்காகும். அப்படியின்றி, "இவ்வாழ்வு என்னுடைய விதி" என்று சிந்திப்பது தன்னம்பிக்கை அற்ற வாழ்வியலை வெளிப்படுத்தும் தன்மையாகும். மனித வாழ்வு ஓர் வாய்ப்பு, ஒரு சந்தர்ப்பம் அதனை ரசிக்குமாறு, அனுபவத்தைப்பெறுமாறு, அனுபவிக்குமாறு இறைவன் கடன்கொடுத்துள்ளான். இவ்வாழ்வின் இரகசியத்தையும் பொக்கிஷத்தையும் அறிவதற்கும், உணர்த்துவதற்கும் இறைவன் சந்தர்ப்பம் வழங்கியுள்ளதால் அதனைத் தவறவிடலாமா?

இவ்வாறான சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொள்வதற்காக எங்களுடைய தத்துவங்களும், புராணங்களும் வழிவகுத்துப் படம்பிடித்துக் காட்டுகின்றன. அவைகளை வாழ்வியலுக்குக் கொண்டுவருவதன் மூலம் உயர்நிலைத் தேவைகளை அனுசரித்துப் பயின்று மேன்நிலை அடைய முயலவேண்டும் அல்லவா? அனுமார் "இந்து சமுத்திரத்தைத் தாண்டுகின்றார்" என்றால் இராமனிடம் காட்டிய பக்தியும், நம்பிக்கையுமே காரணமாகும். அனுமாரிடம் எதைக்கேட்டாலும் ராமநாமத்தைத் தவிர வேறு எதுவும் தெரியாது என்பார்.

**ஜெயராமன் ஸ்ரீகாந்த (ப.இ.வி.பே)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கிய வாழ்விற்கு யோகாசனம்.

ஆறாவது இதழில் கர்மயோகம், பக்தியோகம், இராஜயோகம், ஞானயோகம் என நான்கு யோகங்கள் உண்டு என்றும் இராஜயோகத்தில் உள்ள எட்டுப்படிகளில் முதலில் இருபடிகளான இயமம் (அகிம்சை), நியமம் (உடல்) என்பன பற்றியும் அறிந்துகொண்டோம்.யோகாசனக் கலையானது இராஜயோகத்தில் மூன்றாம் நிலையாகும். இதனின் முக்கியத்துவத்தையும், பயிலத்தகுதி உடையவர்கள் யாவர், எங்கு, எவ்வாறு ஆரம்பிப்பது என்பது பற்றியும் அறிந்து கொள்வோம்.

யோகாசனம என்றதும் காட்டில் வாழும் யோகிகள் மாத்திரம் செய்ய வேண்டியது சாதாரண மானவர்களால் செய்ய முடியாது; செய்யக் கூடாது என்றில்லை. சிறுபிள்ளை முதல், இளைஞர்கள், யுவதிகள், வயோதிபர் வரையிலான அனைத்து வயதினரும் பயிலலாம். நோயாளிகள் கூடத் தங்கள் நோயினது இயல்பிற்கு ஏற்பப் பொருத்தமான ஆசனங்களைத் தெரிவு செய்து பழகலாம். யோகக் கலையைப் பயில்வதன் மூலம் அனைவரிடத்திலும் பொதுவாகக் காணப்படும் வியாதிகளான நீரிழிவு, அஸ்மா, இரத்த அழுத்தம், மனஅழுத்தம் போன்றவற்றிலிருந்து பூரணமாகக் குணமடையலாம். மேலும் யோகாசனம் செயவதற்கு முன் அவதானிக்க வேண்டிய விடயங்கள் சிலவற்றை நோக்குவோம்.

யோகாசனம் செய்வதற்குரிய இடம் தூய்மையான காற்றுள்ள இடமாக இருத்தல் வேண்டும். ஆசனம் செய்வதற்கு அரை மணித்தியாலயங்களுக்கு முன் குளிக்கலாம் அல்லது அரை மணித்தியாலயங்களுக்குப்பின் குளிக்கலாம். உணவு உண்டு குறைந்தது நான்கு மணித்தியாலங்களின் பின்னும், சிற்றுண்டி உண்டு குறைந்தது இரண்டு மணித்தியாலயங்களின் பின்னும் ஆசனங்கள் செய்யலாம். பெண்கள் மாதவிலக்கு நாட்களில் ஆசனம் செய்வதைத் தவிர்க்கவும். கர்ப்பிணிப் பெண்கள் எட்டுமாதங்கள் வரை ஆசனங்கள் செய்வதைத் தவிர்க்கவும். எட்டுமாதங்களின் பின் இலகுவான ஆசனங்கள் சிலவற்றைச் செய்யலாம். ஆசனங்கள் செய்யும் போது மலர்ந்த முகத்துடனும் விருப்புடனும் மனதை ஆசனத்திற் செலுத்தியும் செய்ய வேண்டும். எந்தவகையான ஆசனப் பயிற்சியின் போதும் கஷ்டப்பட்டுச் செய்யக் கூடாது. இவ்வாறு வலிந்து கஷ்டப்பட்டுச் செய்யும் போது அவ்வாசனங்களுக்குரிய பலனைப் பெற்றுக்கொள்ள முடியாது. யோகாசனம் இறைவனை நினைத்து ஆரம்பிக்க வேண்டும். இவ்வாறு ஆரம்பிக்கும் போது எம்மனம் ஒன்றுபடுவதுடன் யோகாசனம் செய்வதற்கான சூழ்நிலை உருவாகின்றது. மனம் விசாலமடைந்து இறைவனின் அருள் கிடைக்கின்றது. எனவே யோகாசனக்கலையானது மனிதனுக்கும், இறைவனுக்கும் ஒரு தொடர்பாக விளங்குவதுடன் மனதை உறுதியான நிலையில் வைத்திருப்பதற்கும் உதவுகின்றது.


P. **சுதர்சன்**
(சனாதன தர்மக்கழகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கநாதம் குறுக்கெழுத்துப் போட்டி இல 08

## 200/= 150/= 100/=



போட்டி இல 6 வெற்றி பெற்றோர்

1ம் இடம் **A.Tharsini Thapovanam, uppuveli Trincomalee.**

2ம் இடம்: **P.Sudhaharan 44/3A,Mattawa Road, Warakamura, ukuwela-21300**

3ம் இடம் :**R.Subashini C/o. Ravi Vivekananda T.v Attempitiya**

## மேலிருந்து கீழ்

1. தமிழகத்தில் தலைசிறந்த கலைப்படைப்புடைய; கடற்கரை குகைக்கோயில் அமைந்துள்ள இடம்.
2. நூல்களால் ஆனது, மானத்தைக் காப்பது; திரும்பியுள்ளது.
3. கரும்பிலிருந்து எடுக்கப்படுவது இனிப்பானது, குழம்பியுள்ளது.
4. காற்றுக்கு ஒத்த சொல்; இந்து இலக்கியங்களில் பெரும்பாலும் இவ்வாறே சொல்லப்படும்.
5. நான்கு வர்ணத்தில் ஒருவன்; நாடாளப்பிறந்தவன்.
6. பலவகையான பூக்களின் அல்லது நிகழ்ச்சிகளின் தொகுப்பு
7. மூன்று வயதில் தேவாரம் பாடியவர், 'திரு' வை இழந்து குழம்பியுள்ளார்.
8. இதை மதியால் வெல்லலாம் என்றும், வெல்ல முடியாது என்றும் வாதிடுவர். வாழ்வு இதன்படியே அமையுமாம்.

16 கர்ப்பக்கிரகத்திற்கு மேற்கூரை.

18. விளையாத பூமி.

17. ஓரம் எனப்பொருள்படும், அலைகள் மோதும் இடம்.

18 இறைவனையே தியானித்து நிஷ்டையில் இருப்பதை இவ்வாறு கூறலாம திரும்பியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடமிருந்து வலம்

1. திருவாசகத்தை இயற்றியவர்
8. கண்ணகியால் எரிக்கப்பட்ட நகரம்
9. போரைக்குறிக்கும் சொல்
10. புலவர்களால் இது இயற்றப்படும்.
12. ஒரு நாளை இவ்வாறும் குறிக்கலாம். (குழம்பியுள்ளது)
13. ஒருவரால், இன்னொருவருக்கு எதிராகச் செய்யப்படும் சூழ்ச்சி
14. இந்தியாவில் உள்ள பிரசித்திபெற்ற ஐயப்பன் ஆலயம் அமைந்துள்ள மலை. திரும்பியுள்ளது.
15. சூரிய மண்டலத்தில் மூன்றாவதாக உள்ள கோள்.
17. ஒன்றை நிருபிப்பதற்கான ஆதாரம் குழம்பியுள்ளது.
19. ஆலயத்துக்குச் சென்று இறையருள் பெறுதலைக்குறிக்கும். திரும்பியுள்ளது.
20. கற்பகதரு என அழைக்கப்படும் மரம். திரும்பியுள்ளது
21. சுத்தம் — தரும் திரும்பியுள்ளது.
22. சூரியனுக்கு உரிய மறுபெயர். ஒரு கிழமையையும் குறிக்கும். திரும்பியுள்ளது.

## சங்கநாதம் குறுக்கெழுத்துப் போட்டி இல 06 விடைகள்

### மேலிருந்து கீழ்

1. கணபதி
2. கார்த்திகை
3. வெல்லம்
4. பசு
7. சாக்கடை
8. இம்மை
11. பகல்
13. சயனம்
14. துகில்
16. சிவன்
18. மதி

### இடமிருந்து வலம்

1. கடிகாரம்
4. சுமை
5. பல்லவர்
6. படைத்தல்
9. திகதி
10. வெப்பம்
12. சக்கை
14. சாது
15. யன்னல்
17. வணம்
24. கல்
20. சித்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கநாதம் சஞ்சிகை பெறக்கூடிய இடங்கள்

1. அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில், ஹட்டன்.
2. ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி கோயில், பொகவந்தலாவ.
3. சனாதன தர்ம புவவிழிப்புணர்ச்சிக் கழகம்
   No - 38 Vihara Road, மாத்தளை T.P : 066 - 33014
4. கதிரேசன் கோவில், தலவாக்கலை.
5. ஸ்ரீ S.மனோகரக்குருக்கள், மன்னார்த்தீவு ஆலயங்களின் விசேட பிரதிநிதி, உப்புக்குளம் சித்திவிநாயகர் ஆலயம் மன்னார்.
6. Dr. P. Suresh 41 A Bus Stand, Hatton T:P : 051 - 24203
7. கொழும்பு சனாதன தர்மபுவவிழிப்புணர்ச்சிக் கழகம்
   No 3, Ridgeway Place, Colombo - 04 T.P : 01 - 584145

---

## சங்கநாதம்

**இந்துக்களின் எழுச்சிக்குரலாக வெளிவரும் மாதாந்த இதழ்**
**உங்கள் ஆதரவை வேண்டுகிறோம்.**
**ஆண்டு சந்தா ரூபா 180 மட்டுமே**

காசுக்கட்டளை : Sanganatham Y.L.S.D.P
World trade Centre
Post Office.

காசோலை : குறுக்குக் கோடிடப்பட்டு
Y.L.S.D.P
A/C No 0680 - 555650 -001
Seylan Bank, Colombo - 06.

Name ........................................................

Address ........................................................

T.P No ........................................................

அனுப்ப வேண்டிய முகவரி
No 3, Ridgeway Place, Colombo - 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எது பகுத்தறிவு?

(சுவாமி விவேகானந்தர்)

ஞானயோகத்தின் லட்சியம் என்ன? முத்தி. விடுதலை எதிலிருந்து விடுதலை? நமது குறைகளிலிருந்து விடுதலை. வாழ்க்கைத் துன்பங்களில் இருந்து விடுதலை. நாம் ஏன் துன்பப்படுகின்றோம்? ஏனெனில் நாம் கட்டுண்டிருக்கின்றோம். அந்தக் கட்டு அல்லது தளை எது? அது இயற்கை சம்பந்தப்பட்டது. நம்மைக் கட்டி வைத்திருப்பது யார்? நாம் நாமே.

இந்தப் பிரபஞ்சமே காரணகாரிய விதிகளால் கட்டப்பட்டிருக்கின்றது. அக உலகிலும் சரி, புற உலகிலும் சரி காரணமில்லாத எந்தப் பொருளோ, எந்த உண்மையோ இருக்க முடியாது. நம்மை கட்டியிருக்கின்ற இந்தத் தளையும் உண்மையானது. நாம் கட்டுப்பட்டிருக்கின்றோம் என்பதை நிரூபிக்க வேண்டியதில்லை. உதாரணமாக இந்த அறையிலிருந்து சுவரை ஊடுருவிக் கொண்டு என்னால் வெளியேற முடியுமானால் சந்தோசமாகத்தான் இருக்கும். ஆனால் அது முடியாது. எனக்கு நோயே வராமல் இருக்குமானால் அது மிகவும் நல்லது. ஆனால் நோய் வருவதை என்னால் தடுக்க முடியாது. எனக்குச் சாவே கிடையாது என்றால் மிகவும் மகிழ்ச்சிதான். ஆனால் நான் இறந்தேயாக வேண்டும். என்னால் இயலாத லட்சக்கணக்கான விஷயங்களை எல்லாம் செய்ய முடியுமானால் பேரானந்தம்தான். ஆசை இருக்கின்றது. ஆனால் அதை நிறைவேற்றுவதில் வெற்றிபெற முடியவில்லை. ஆசைகள் இருந்தாலும், அவற்றை நிறைவேற்றும் வழிகிடைக்காமல் போகும் போது தான் துன்பம் என்ற விநோதமான பிரதிச்செயல் உண்டாகிறது. ஆசைக்குக் காரணம் யார்? நான், நானே எனவே இப்போது நான் படும் துன்பங்களுக்கு எல்லாம் நானே காரணம்.

குழந்தை பிறக்கும் போது அதன் துன்பம் தொடங்கி விடுகின்றது. பலவீனனாக, உதவியற்றவனாக, அவன் பூமிக்கு வருகின்றான். வாழ்க்கையின் முதல் அறிகுறியே அழுகைதான். ஆரம்பத்திலேயே துன்பம் இருக்கும் போது துன்பத்துக்கு நாம் எப்படிக் காரணமாக முடியும்: அது நமது முன்வினைப்பயனால் நிகழ்ந்தது. முதலில் நாம் என்றென்றும் இருந்துவருகிறோம் என்பது புரிகிறது. இரண்டாவதாக, நாமே நமது வாழ்க்கையை உருவாக்கி உள்ளோம் என்பது தெரிகிறது. விதி என்று எதுவும் கிடையாது நமது வாழ்க்கை நமது முன்வினைப்பயன், நமது கர்மத்தின் விளைவு. இவ்வாறு நாமே நமது கர்மத்தை உருவாக்கி இருக்கின்றோம் என்றால், அதை அழிக்கவும் நம்மால் முடியும் என்பது உண்மைதானே?

இந்த வினைப்பயனை எப்படி அழிப்பது என்பதை மனித குலத்துக்குக் காட்டுவதே ஞானயோகத்தின் சாரமாகும். வண்ணத்துப் பூழு தன் உடலிலிருந்து சுரக்கின்ற பொருளால் தன்னைச்சுற்றித் தானே கூடமைத்துக்கொண்டு அதில் தானே சிறைப்படுகின்றது. அங்கே கிடந்தவாறு அது அழலாம், கதறலாம், ஓலமிடலாம் ஆனால் அதன் உதவிக்கு யாரும் வரமாட்டார்கள் இறுதியில் அதுவே ஞானம் பெற்றது. அழகிய வண்ணாத்திப்பூச்சியாக வெளிவருகின்றது. நமது தளைகளைப் பொறுத்தவரையிலும் இதே விஷயம்தான். யுகயுகங்களாக நாமும் பிறப்பு, இறப்பு என்று சுழன்று வருகின்றோம். இப்போது துன்பத்தை உணர்கின்றோம். நாம் கட்டுண்டிருப்பதை எண்ணி அழுது புரள்வதாலும் எந்தப்பயனும் இல்லை. இந்தத் தளைகளை உடைப்பதில் நாம் முனைந்து ஈடுபட வேண்டும்.

**தொகுப்பு: S. மலர்விழி (சனாதன தர்மக்கழகம்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Cover page designed by
V.Nilesh
Rutas Limited

Designed & Printed by
SHARP GRAPHICS [PVT] LTD.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org